winmeen.com

# நான்காம் வார நடப்பு நிகழ்வுகள்

## நவம்பர் 2022

நவம்பர் 22-30

**1. 2022 – உலகளாவிய தகவல் தொழில்நுட்ப அறிக்கையின்படி, வலையமைப்பு தயார்நிலை குறியீட்டில் முதலிடம் வகிக்கிற நாடு எது?**

**அ. அமெரிக்கா ☑**

ஆ. சிங்கப்பூர்

இ. இந்தியா

ஈ. சுவீடன்



✓ அமெரிக்கா, சிங்கப்பூர், சுவீடன், நெதர்லாந்து மற்றும் சுவிச்சர்லாந்து ஆகியவை 2022–வலையமைப்பு தயார்நிலைக் குறியீட்டின்படி நெட்வொர்க் தயார்நிலையிலுள்ள நாடுகளாகும். உலகளாவிய தகவல் தொழில்நுட்ப அறிக்கையின் ஒருபகுதியாக உலக பொருளாதார மன்றத்தால், கடந்த 2002இல் இந்தக்குறியீடு தொடங்கப்பட்டது. மேம்பாடு மற்றும் போட்டித்தன்மைக்கு தகவல் மற்றும் தொடர்பு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதற்கான முக்கிய அளவீடாகும் இந்தக் குறியீடு. இந்த ஆண்டுக்கான கருப்பொருள், "Stepping into the new digital era: How and why digital natives will shape the world" என்பதாகும்.

**2. இந்தியாவின் 53ஆவது சர்வதேச திரைப்பட விழாவின்போது (IFFI) 2022ஆம் ஆண்டுக்கான இந்திய திரைப்பட ஆளுமை விருதானது கீழ்க்காணும் யாருக்கு வழங்கப்பட்டது?**

அ. இரஜினிகாந்த்

**ஆ. சிரஞ்சீவி ☑**

இ. கமல்ஹாசன்

ஈ. மோகன்லால்



✓ 53ஆவது இந்திய சர்வதேச திரைப்பட விழாவின் (IFFI) தொடக்க விழாவில், தெலுங்கு 'சூப்பர் ஸ்டார்' சிரஞ்சீவிக்கு 2022ஆம் ஆண்டுக்கான இந்திய திரைப்பட ஆளுமை விருது வழங்கப்பட்டது. நடுவண் தகவல் மற்றும் ஒலிபரப்புத் துறை அமைச்சர் அனுராக் தாக்கூர், கோவா ஆளுநர் PS ஸ்ரீதரன்பிள்ளை, முதலமைச்சர் பிரமோத் சாவந்த் ஆகியோர் கலந்துகொண்ட தொடக்க விழாவுடன் 53ஆவது இந்திய சர்வதேச திரைப்பட விழா தொடங்கியது.

**3. ஏழை நாடுகளை ஆதரிப்பதற்காக, "இழப்பு மற்றும் சேத நிதியத்தை" தொடங்கிய மாநாடு எது?**

**அ. COP–27 ☑**

ஆ. G–20 வருடாந்திர உச்சிமாநாடு

இ. ASEAN வருடாந்திர உச்சிமாநாடு

ஈ. WEF வருடாந்திர உச்சிமாநாடு

✓ ஐநாஇன் காலநிலை உச்சிமாநாடான COP–27இல் ஏறக்குறைய இருநூறு நாடுகள் பருவநிலை தாக்கங்களால் பாதிக்கப்பட்ட ஏழை நாடுகளை ஆதரிப்பதற்காக, "இழப்பு மற்றும் சேத நிதியத்தை" அமைப்பதற்கு ஒப்புக்கொண்டன. "இழப்பு மற்றும் சேதம்" என்பது காலநிலை இயக்கத்தால் ஏற்படும் வானிலை தீவிரங்கள் அல்லது கடல்மட்ட உயர்வு போன்ற தாக்கங்களால் ஏற்படும் செலவினங்களைக் குறிக்கிறது. ஏழை நாடுகளால் தவிர்க்க முடியாத அல்லது மாற்றியமைக்க முடியாத சேதத்தின் செலவை இந்த நிதியம் ஈடுசெய்கிறது.

**4. ITTF–ATTU ஆசிய கோப்பையில் பதக்கம் வென்ற முதல் இந்திய டேபிள் டென்னிஸ் வீரர் / வீராங்கனை யார்?**

அ. சரத் கமல்

**ஆ. மனிகா பத்ரா ☑**

இ. ஸ்ரீஜா அகுல

ஈ. சத்தியன் ஞானசேகரன்



✓ தாய்லாந்தின் பாங்காக்கில் நடைபெற்ற ITTF–ATTU ஆசிய கோப்பை டேபிள் டென்னிஸ் போட்டியில் பதக்கம் வென்ற முதல் இந்திய டேபிள் டென்னிஸ் வீராங்கனையாக மனிகா பத்ரா ஆனார். உலகின் 6ஆம்நிலை டேபிள் டென்னிஸ் வீராங்கனையான ஜப்பானின் ஹினா ஹயாடாவை தோற்கடித்து அவர் வெண்கலப்பதக்கம் வென்றுள்ளார். கடந்த 1997ஆம் ஆண்டில் வெள்ளி மற்றும் 2000ஆம் ஆண்டில் வெண்கலம் வென்ற சேத்தன் பாபூர், இதற்கு முன் ஆசிய கோப்பையில் பதக்கம் வென்ற ஒரே இந்திய டேபிள் டென்னிஸ் வீரராக இருந்தார்.

**5. 2022ஆம் ஆண்டில் செயற்கை நுண்ணறிவுக்கான உலகளாவிய கூட்டாண்மையின் தலைவராக இருக்கும் நாடு எது?**




அ. இலங்கை

ஆ. வங்காளதேசம்

**இ. இந்தியா ☑**

ஈ. இங்கிலாந்து

✓ செயற்கை நுண்ணறிவுக்கான உலகளாவிய கூட்டாண்மைக்கான (GPAI) தலைமைப்பொறுப்பை பிரான்ஸிடம் இருந்து இந்தியா பெற்றுக்கொண்டது. GPAI என்பது அமெரிக்கா, இங்கிலாந்து, ஐரோப்பிய ஒன்றியம், ஆஸ்திரேலியா, கனடா, பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான், மெக்சிகோ, நியூசிலாந்து, கொரியா குடியரசு மற்றும் சிங்கப்பூர் உட்பட 25 உறுப்புநாடுகளின் சங்கமாகும். இந்தியா, கடந்த 2020இல் GPAIஇன் நிறுவன உறுப்பினராக இணைந்தது.

**6. UN–FAO கூட்டறிக்கையின்படி, எந்த நாட்டைச் சார்ந்த எட்டு மில்லியன் மக்கள் பட்டினியால் வாடும் அபாயத்தில் உள்ளனர்?**



**அ. தெற்கு சூடான் ☑**

ஆ. இஸ்ரேல்

இ. இலங்கை

ஈ. எகிப்து

✓ உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு (FAO), ஐநா குழந்தைகள் நிதியமான UNICEF மற்றும் உலக உணவுத் திட்டம் ஆகியவை கூட்டாக இணைந்து வெளியிட்ட ஒரு சமீபத்திய அறிக்கையின்படி, தெற்கு சூடானில் கிட்டத்தட்ட எட்டு மில்லியன் மக்கள் பட்டினியால் வாடும் அபாயத்தில் உள்ளனர். இந்த அறிக்கையின்படி, அதிக அளவிலான உணவுப்பாதுகாப்பின்மை மற்றும் ஊட்டச்சத்துக் குறைபாட்டை எதிர்கொள்ளும் மக்களின் விகிதம், கடந்த 2013 மற்றும் 2016ஆம் ஆண்டில் நடந்த மோதலின்போது இருந்த அளவைவிட அதிகரித்துள்ளது.

**7. அண்மையில் இந்தியாவின் மிகப்பெரிய காற்றாலை நிறுவப்பட்ட மாநிலம் எது?**



அ. தமிழ்நாடு

ஆ. மகாராஷ்டிரா

**இ. குஜராத் ☑**

ஈ. கர்நாடகா

✓ அதானி நியூ இண்டஸ்ட்ரீஸ் இந்தியாவின் மிகப்பெரிய காற்றாலை மின்னியற்றியை குஜராத் மாநிலத்தில் உள்ள முந்த்ராவில் நிறுவியுள்ளது. இந்த விசையாழி ஒற்றுமை சிலையைவிட (182 மீ) உயரமானது என்று கூறப்படுகிறது. அதானி எண்டர்பிரைசஸ் லிமிடெடின் துணை நிறுவனமான முந்த்ரா விண்ட்டெக் லிமிடெட்மூலம் இவ்விசையாழி நிறுவப்பட்டுள்ளது.

**8. ஆசிய கான்டினென்டல் செஸ் சாம்பியன்ஷிப்பில் ஓபன் மற்றும் மகளிர் பட்டங்களை வென்ற இந்திய செஸ் வீரர்/ வீராங்கனைகள் யார்?**

**அ. R பிரக்ஞானந்தா மற்றும் P V நந்திதா ☑**

ஆ. B அதிபன் மற்றும் கோனேரு ஹம்பி

இ. R பிரக்ஞானந்தா மற்றும் கோனேரு ஹம்பி

ஈ. B அதிபன் மற்றும் P V நந்திதா



✓ ஆசிய கான்டினென்டல் செஸ் சாம்பியன்ஷிப்பில் இந்திய கிராண்ட்மாஸ்டர் ஆர் பிரக்ஞானந்தா மற்றும் சகநாட்டு வீரரான PV நந்திதா ஆகியோர் முறையே ஓபன் மற்றும் பெண்கள் பிரிவில் பட்டங்களை வென்றனர். பிரக்ஞானந்தா ஒன்பதாவது மற்றும் கடைசி சுற்றில் சகநாட்டவரான B அதிபனுடன் டிரா செய்து ஏழு புள்ளிகளுடன் பட்டத்தை வென்றார். இந்த வெற்றி பிரக்ஞானந்தாவுக்கு அடுத்த FIDE உலகக்கோப்பைக்கான அனுமதியையும் பெற்றுத்தந்தது. பெண்களுக்கான போட்டியில் நந்திதா ஆட்டமிழக்காமல் 7.5 புள்ளிகளுடன் முதலிடம் பிடித்தார்.

**9. அண்மையில் காலஞ்சென்ற எலா பட், கீழ்க்காணும் எந்த முதன்மை நிறுவனத்தின் நிறுவனராவார்?**

**அ. SEWA ☑**

ஆ. AICTU

இ. CII

ஈ. FICCI



✓ SEWAஇன் (Self Employed Women's Association) நிறுவனரும் புகழ்பெற்ற பெண்ணுரிமை ஆர்வலருமான எலா பட் அண்மையில் காலமானார். SEWA ஆனது அமைப்புசாரா துறையில் பணிபுரியும் பெண்களின் தொழிற்சங்கமாக உருவாக்கப்பட்டது; இதில் இப்போது இரண்டு மில்லியன் உறுப்பினர்கள் உள்ளனர். 89 வயதான, 'பத்ம பூஷண்' விருதாளரான இவர், பெண்கள் அதிகாரமளிப்புத் துறையில் முன்னோடியாக இருந்தார்.

**10. 17ஆவது பிரவாசி பாரதிய திவாஸ் மாநாட்டில் கீழ்க்காணும் எந்த நாட்டின் அதிபர் முதன்மை விருந்தினராக கலந்துகொள்கிறார்?**

அ. ஆஸ்திரேலியா

ஆ. இஸ்ரேல்

**இ. கயானா ☑**

ஈ. பிரேசில்



✓ 17ஆவது பிரவாசி பாரதிய திவாஸ் மாநாட்டில் கயானா அதிபர் Dr முகமது இர்பான் அலி முதன்மை விருந்தினராக கலந்துகொள்கிறார். இந்த மாநாடு 2023 ஜனவரியில் மத்திய பிரதேச மாநிலத்தின் இந்தூரில் நடைபெறும். இளையோர் பிரவாசி பாரதிய திவாஸ் விழாவில் சிறப்பு விருந்தினராக ஆஸ்திரேலிய நாடாளுமன்ற உறுப்பினர் சனெட்டா மஸ்கரென்ஹாஸ் கலந்துகொள்வார் என்றும் நடுவண் வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது. 17ஆவது பிரவாசி பாரதிய திவாஸின் கருப்பொருள், "Diaspora: Reliable Partners for India's Progress in Amrit Kaal" என்பதாகும்.

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. ஜோகோவிச் சாதனை சாம்பியன்**

ஏடிபி ஃபைனல்ஸ் ஆடவர் டென்னிஸ் போட்டியின் ஒற்றையர் பிரிவில் செர்பியாவின் நோவக் ஜோகோவிச் சாம்பியன் ஆனார். இறுதிச்சுற்றில் அவர் 7–5, 6–3 என்ற செட்களில் நார்வேயின் கேஸ்பர் ரூடை தோற்கடித்தார். இந்தப் போட்டியில் அவர் 2015ஆம் ஆண்டுக்குப்பிறகு சாம்பியன் ஆவது இதுவே முதல் முறையாகும். இப்போட்டியில் சுவிட்ஸர்லாந்தின் ரோஜர் பெடரர் ஆறு முறை சாம்பியன் ஆனதே அதிகபட்சமாக இருக்கும் நிலையில், தற்போது ஜோகோவிச்சும் அதே எண்ணிக்கையிலான பட்டங்களை வென்று அவரது சாதனையை சமன் செய்திருக்கிறார்.

மேலும், இந்தப் பட்டத்தை வெல்லும் மிக வயதான வீரர் (35) என்ற பெருமையையும் பெற்ற அவர், ரொக்கப் பரிசாக ரூ.38 கோடியை கைப்பற்றியுள்ளார். இந்தப் போட்டி முழுவதுமாக அவர் ஒரு தோல்வியைக் கூட பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இத்துடன் நடப்பு ஆண்டை, விம்பிள்டன் கிராண்ட்ஸ்லாம் உள்பட 5 சாம்பியன் பட்டங்களுடன் ஜோகோவிச் நிறைவு செய்திருக்கிறார்.

**1. 'கர்மயோகி பிரரம்ப்' என்பது கீழ்க்காணும் எந்தப் பிரிவினருக்காகத் தயாரிக்கப்பட்ட பாடமாகும்?**

அ. வெளிநாடு வாழ் இந்தியர்கள்

**ஆ. அரசுப் பணியாளர்கள் ☑**

இ. MSMEகள்

ஈ. அமைப்புசாரா துறை ஊழியர்கள்



✓ பிரதமர் நரேந்திர மோதி, அரசு ஊழியர்களுக்காகத் தயாரிக்கப்பட்ட இணையவழி அடிப்படையில் நடத்தப்படும் 'கர்மயோகி பிரரம்ப்' என்ற பாடத்தொகுதியைத் தொடங்கி வைத்தார். பிரதம மந்திரி ரோஸ்கர் மேளாவின்கீழ் 71,000 இளைஞர்களுக்கு நியமனக் கடிதங்கள் வழங்கும் திட்டத்தையும் அவர் அப்போது தொடக்கிவைத்தார்.

**2. 'சங்காய் திருவிழா' என்பது கீழ்க்காணும் எந்த மாநிலத்தில் கொண்டாடப்படும் ஒரு கலாச்சார விழாவாகும்?**

அ. மேற்கு வங்காளம்

ஆ. ஒடிஸா

**இ. மணிப்பூர் ☑**

ஈ. அஸ்ஸாம்



✓ நடுவண் சுற்றுலாத்துறை அமைச்சர் ஜி கிசன்ரெட்டி, சங்காய் இனவியல் பூங்காவில் 'மணிப்பூர் சங்காய் விழாவைத் தொடக்கிவைத்தார். வடகிழக்கு மாநிலம் முழுவதும் 13 இடங்களில் நவ.30ஆம் தேதி வரை 10 நாட்கள் நடைபெறும் இவ்விழா, மாநிலத்தின் அனைத்து பழங்குடியினத்தைச் சார்ந்த மக்களின் பங்கேற்பின்மூலம் ஒற்றுமையை நிலை பெறச்செய்வதற்கான ஒரு திருவிழாவாகக் கொண்டாடப்படுகிறது.

**3. 2022இல் இந்தோ-பசிபிக் பிராந்திய அளவிலான பேச்சுவார்த்தையை நடத்தும் நகரம் எது?**

அ. கொழும்பு

**ஆ. புது தில்லி ☑**

இ. டாக்கா

ஈ. இஸ்லாமாபாத்

✓ "இந்தோ-பசிபிக் பெருங்கடல்கள் முனைவைச் செயல்படுத்துதல்" என்ற கருப்பொருளில் இந்தோ-பசிபிக் பிராந்திய அளவிலான பேச்சுவார்த்தையின் நான்காவது பதிப்பு புது தில்லியில் தொடங்கப்பட்டது. இப்பேச்சுவார்த்தை என்பது இந்திய கடற்படையின் உயர்மட்ட சர்வதேச வருடாந்திர மாநாடாகும். தேசிய கடல்சார் அறக்கட்டளையானது இந்த நிகழ்வின் அறிவுசார் பங்காளராகவும் தலைமை அமைப்பாளராகவும் உள்ளது.

**4. 2022இல் UNEP, 'சாம்பியன்ஸ் ஆஃப் தி எர்த்' விருதைப் பெற்ற இந்தியர் யார்?**

**அ. பூர்ணிமா தேவி பர்மன் ☑**

ஆ. நரேந்திர மோதி

இ. K K ஷைலஜா

ஈ. பியூஷ் கோயல்



✓ அஸ்ஸாமைச் சேர்ந்த வனவுயிரி உயிரியலாளர் பூர்ணிமா தேவி பர்மனுக்கு இந்த ஆண்டுக்கான, 'சாம்பியன்ஸ் ஆஃப் தி எர்த்' விருது வழங்கப்பட்டது. இது ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் திட்டத்தால் (UNEP) வழங்கப்படுகிறது. அஸ்ஸாமிய மொழியில், 'ஹர்கிலா' என்று அழைக்கப்படும் 'பெருநாரையைப் பாதுகாக்கும் திட்டத்திற்காக, 'தொழில் முனைவோர் பார்வை' பிரிவில் பூர்ணிமா தேவி பர்மன் அவ்விருதை வென்றார்.

**5. அண்மையில், 'தற்கொலை தடுப்புக் கொள்கையை' வெளியிட்ட ஆசிய நாடு எது?**




அ. இலங்கை

ஆ. வங்காளதேசம்

**இ. இந்தியா ☑**

ஈ. இங்கிலாந்து

✓ இந்தியாவின் நடுவண் சுகாதாரம் மற்றும் குடும்பநல அமைச்சகமானது ஒரு 'தேசிய தற்கொலை தடுப்பு உத்தி'யை அறிவித்துள்ளது. 2030ஆம் ஆண்டளவில் தற்கொலையின் காரணமாக ஏற்படும் மரணங்களை 10% குறைக்கும் வகையிலான செயல்திட்டங்களை இது கொண்டுள்ளது. அடுத்த 5 ஆண்டுகளுக்குள் அனைத்து மாவட்டங்களிலும், அடுத்த 8 ஆண்டுகளுக்குள் அனைத்து கல்வி நிறுவனங்களிலும் மனநலப் பாடத்திட்டத்தை ஒருங்கிணைக்க வேண்டும் என்பது இதன் நோக்கமாகும்.

**6. 'உலக ஆழிப்பேரலை விழிப்புணர்வு நாள்' அனுசரிக்கப்படுகிற மாதம் எது?**

அ. ஜனவரி

ஆ. மே

இ. செப்டம்பர்

**ஈ. நவம்பர் ☑**

✓ கடந்த 2015ஆம் ஆண்டில் ஐநா சபையானது ஒவ்வோர் ஆண்டும் நவம்பர்.5ஆம் தேதி உலக சுனாமி விழிப்புணர்வு நாளாக அனுசரிக்கப்படும் என்று அறிவித்தது. ஆழிப்பேரலை தாக்கும்போது, அனைவரும் உயரமான இடத்திற்குச் செல்ல தயாராக இருக்கவேண்டும் என்பதை இந்நாள் நினைவூட்டுகிறது. பேரிடர் அபாயக் குறைப்புக்கான ஐநா அலுவலகத்தின்படி, தொடக்கநிலை எச்சரிக்கை மற்றும் முன்கூட்டிய நடவடிக்கை ஆகியவை மக்களைக்காக்கும் இரு பயனுள்ள கருவிகளாகும்.

**7. 2022ஆம் ஆண்டில், 'வேளாண் தொழில்நுட்ப இந்தியா – வேளாண் மற்றும் உணவு தொழில்நுட்பக் கண்காட்சி' நடத்தப்படும் நகரம் எது?**

அ. மும்பை

**ஆ. சண்டிகர் ☑**

இ. மைசூரு

ஈ. காந்திநகர்

✓ இந்திய தொழிற்துறை கூட்டமைப்பு (CII) ஏற்பாடு செய்துள்ள 'வேளாண் தொழில்நுட்ப இந்தியாவின் 15ஆவது பதிப்பு நவ.4–7 வரை சண்டிகரில் நடக்கவுள்ளது. உழவு மற்றும் உழவர்கள்நல அமைச்சகம், உணவுப் பதனிடும் தொழிற் துறைகள் அமைச்சகம் மற்றும் வேளாண் & பதப்படுத்தப்பட்ட உணவு தயாரிப்புகள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம் (APEDA) CII வேளாண் தொழில்நுட்ப இந்தியா – வேளாண் மற்றும் உணவு தொழில்நுட்பக் கண்காட்சிக்கான பங்காளர்களாக உள்ளன. இந்த ஆண்டுக்கான கருப்பொருள், "Digital Transformation for Sustainable Agriculture and Food Security" என்பதாகும்.

**8. இந்தியாவில், 'தேசிய புற்றுநோய் விழிப்புணர்வு நாள்' அனுசரிக்கப்படுகிற தேதி எது?**

அ. ஆகஸ்ட்.07 **ஆ. நவம்பர்.07 ☑**

இ. டிசம்பர்.07 ஈ. ஜனவரி.07

✓ புற்றுநோயின் அபாயங்களை எடுத்துரைப்பதற்காக, இந்தியாவில் ஒவ்வோர் ஆண்டும் நவம்பர்.07 அன்று 'தேசிய புற்றுநோய் விழிப்புணர்வு நாள்' அனுசரிக்கப்படுகிறது. தேசிய புற்றுநோய் விழிப்புணர்வு நாளானது கடந்த 2014 செப்டம்பரில் அறிவிக்கப்பட்டது. இது நோபல் பரிசு பெற்ற மேரி கியூரியின் பிறந்தநாளுடன் ஒத்திசைந்து வருகிறது; அவருடைய பங்களிப்புகள் புற்றுநோய் சிகிச்சைக்கான கதிரியக்க சிகிச்சையின் வளர்ச்சிக்கு வழிகோலியது.

### 9. கேரள மாநில அரசால் நிறுவப்பட்ட, 'கேரள ஜோதி' விருதை முதன்முதலில் பெற்றவர் யார்?



அ. அடூர் கோபாலகிருஷ்ணன்

**ஆ. M T வாசுதேவன் நாயர் ☑**

இ. கணாய் குன்ஹிராமன்

ஈ. வைக்கம் விஜயலக்ஷ்மி

✓ மூத்த எழுத்தாளர் M T வாசுதேவன் நாயர், கேரள மாநில அரசால் நிறுவப்பட்ட முதல் 'கேரள ஜோதி' விருதைப் பெற்றவர். இதன் நடுவர் குழுமத்திற்கு பிரபல திரைப்பட தயாரிப்பாளர் அடூர் கோபாலகிருஷ்ணன் தலைமை தாங்கினார். நடிகர் மம்மூட்டி, முன்னாள் அரசு ஊழியர், சமூக ஆர்வலர் T மாதவ மேனன் உள்ளிட்டோர் 'கேரள பிரபா' விருதுக்கும், 'சிற்பி' கணாய் குன்ஹிராமன், அறிவியலாளரும் கல்வியாளருமான M P பரமேஸ்வரன், பாடகி வைக்கம் விஜயலட்சுமி உள்ளிட்டோருக்கு, 'கேரள ஸ்ரீ' விருதும் வழங்கப்படவுள்ளது.

### 10. 'Innovations for You' என்ற நினைவுக் குறிப்பேட்டின் நான்காவது பதிப்பை வெளியிட்ட நிறுவனம் எது?

**அ. NITI ஆயோக் ☑**

ஆ. இந்திய ரிசர்வ் வங்கி

இ. UIDAI

ஈ. தேசிய புத்தாக்க அறக்கட்டளை

✓ NITI ஆயோக்கின் அடல் புத்தாக்க இயக்கமானது (AIM) 'Innovations for You' என்ற நினைவுக்குறிப்பேட்டின் 4ஆவது பதிப்பை வெளியிட்டது. இது AIM, NITI ஆயோக்கின் அடல் அடைவு மையங்களின் ஆதரவில் இருக்கும் இந்தியாவின் 75 வெற்றிகரமான பெண்தொழில்முனைவோர் பற்றிய விவரங்களைக் கொண்டுள்ளது. 'Innovations for You' என்ற தொடர், நிலையான எதிர்காலத்தை உருவாக்குவதற்காக துளிர் நிறுவனங்கள் எத்தகைய புதுமைகளை உருவாக்குகின்றன என்பதை எடுத்துக்காட்டுகிறது.

---

## செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. தீனதயாள் உபாத்தியாய ஊரக திறன் பயிற்சி திட்டம் (DDU–GKY)**

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கமானது நடுவணரசின் ஊரக வளர்ச்சி அமைச்சகத்தின்கீழ் ஒன்றிய மாநில அரசின் வாயிலாக கிராமப்புற இளைஞர்களின் வேலைவாய்ப்பிற்காக மாநில அரசின் ஊரக வளர்ச்சித் துறையின்மூலமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

சென்னை நீங்கலாக தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் செயல்பட்டுவரும் தீனதயாள் உபாத்தியாய ஊரக திறன் பயிற்சி திட்டத்தின்கீழ் 18–35 வயதிற்குட்பட்ட கிராமப்புறத்தைச் சேர்ந்த இளைஞர்களுக்கு நிலையான மாத வருமானம் ஈட்டும் வகையில் திறன் பயிற்சியளித்து வேலைவாய்ப்பு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் சுகாதார பராமரிப்பு, ஆயத்த ஆடை வடிவமைப்பு, கட்டுமானத் துறை, ஆட்டோமோட்டிவ், சில்லரை வணிகம், தளவாடங்கள், கட்டுமானத்துறை, அழகுக்கலை, தகவல் தொழில் நுட்பம், சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் போன்ற எளிதில் வேலைவாய்ப்புப் பெறவியலும் 120க்கு மேற்பட்ட தொழிற்பிரிவுகளில் பயிற்சிகள் வழங்கப்பட்டு வேலை வாய்ப்பு ஏற்படுத்தப்படுகிறது. மொத்த பயிற்சி ஒதுக்கீட்டில், சமூகரீதியாக பின்தங்கியுள்ள பிரிவினரான

பட்டியலினத்தினருக்கு – 62 சதவீதம், மலைவாழ் பழங்குடியினருக்கு 3 சதவீதம் மற்றும் சிறுபான்மையினருக்கு 16 சதவீதம் என சிறப்பு ஒதுக்கீடு அளித்து இலவச பயிற்சி வழங்கப்படுகிறது.

---

2. 23–11–2022 – 'உவமைக் கவிஞர்' **சுப்புரத்தினதாசன்** (**சுரதா**) அவர்களின் 102ஆவது பிறந்தநாள்.

---

**3. 'கனவு இல்லம்' திட்டம்: 10 எழுத்தாளர்கள் தேர்வு**

தமிழ் எழுத்தாளர்களைக் கௌரவிக்கும் வகையில், அவர்களுக்கு வீடு வழங்கும் திட்டத்தின்கீழ், நிகழாண்டில் 10 பேர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இதுகுறித்து, தமிழ்நாடு அரசு வெளியிட்ட அறிவிப்பு: எழுத்தாளர்களுக்கு வீடு வழங்கும் திட்டமானது, 'கனவு இல்லம்' என்ற பெயரில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. நிகழாண்டில், பத்துப்பேர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

---

**1. இந்தியாவுடனான தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தை அண்மையில் நிறைவேற்றியுள்ள நாடு எது?**



அ. இலங்கை

**ஆ. ஆஸ்திரேலியா ☑**

இ. பிரான்ஸ்

ஈ. ஜெர்மனி

✓ இந்தியாவுடனான தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தை ஆஸ்திரேலிய நாடாளுமன்றம் நிறைவேற்றியுள்ளதாக பிரதமர் அந்தோனி அல்பானீஸ் அறிவித்துள்ளார். இந்தத் தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தப்பட்டவுடன், ஜவுளித்துறை, தோல், அறைகலன்கள், நகைகள் மற்றும் இயந்திரங்கள் உட்பட இந்தியாவின் 6,000 துறைகளுக்கு ஆஸ்திரேலிய சந்தையில் வரியில்லா அணுகலை வழங்கும். முதல் நாளன்று சுமார் 96.4 சதவீத ஏற்றுமதிகளுக்கு வரியேதும் விதிக்காமல் ஆஸ்திரேலிய இந்த ஒப்பந்தத்தைச் செயல்படுத்தியது.

**2. கீழ்க்காணும் எந்த மாநிலத்தின் முதல் பல்லுயிர் பாரம்பரிய தளமாக, 'அரிட்டாபட்டி' அறிவிக்கப்பட்டுள்ளது?**



**அ. தமிழ்நாடு ☑**

ஆ. கேரளா

இ. தெலுங்கானா

ஈ. ஒடிஸா

✓ சீர்மேவும் தமிழ்நாட்டின் மதுரை மாவட்டத்தில் உள்ள அரிட்டாபட்டி கிராமம் தமிழ்நாட்டின் முதல் பல்லுயிர் பாரம்பரிய தளமாக அறிவிக்கப்பட்டுள்ளது. பல்வேறு வகையான வல்லூறுகள், கழுகுகள் உட்பட சுமார் 250 பறவையினங்கள் அங்கு காணப்படுவதால் அது வளமான உயிரியல் மற்றும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பாரம்பரிய தளமாக கருதப்படுகிறது. இது எறும்புண்ணி, மலைப்பாம்பு மற்றும் தேவாங்குபோன்ற வனவுயிரிகளையும் கொண்டுள்ளது. இந்த அறிவிப்பு, 'உயிரியல் பன்முகத்தன்மை சட்டம், 2002'இன்கீழ் வருகிறது.

**3. சமீப செய்திகளில் இடம்பெற்ற அரசியலமைப்பின் 324ஆவது பிரிவு, எந்தப் பதவி நியமனத்துடன் தொடர்பானது?**

அ. குடியரசுத்தலைவர்

ஆ. ஆளுநர்

**இ. தேர்தல் ஆணையர் ☑**

ஈ. உச்சநீதிமன்ற தலைமை நீதியரசர்

✓ தேர்தல் ஆணையர்கள் மற்றும் தலைமைத் தேர்தல் ஆணையர்களின் நியமனங்களைக் கட்டுப்படுத்தும் சட்டம் இல்லாதது கவலையளிக்கும் போக்கு என உச்சநீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது. தேர்தல் ஆணையர்கள் நியமம்பற்றி பேசும் அரசியலமைப்பின் 324ஆவது பிரிவைச் சுட்டிக்காட்டிய உச்சநீதிமன்றம், அத்தகைய நியமனங்களுக்கான வழிமுறையை அது வழங்கவில்லை என்று கூறியது. கடந்த 2004ஆம் ஆண்டு முதல், எந்தத் தலைமைத் தேர்தல் ஆணையரும் 6 ஆண்டுகால பதவியை நிறைவு செய்ததில்லை.

**4. அண்மைய OECD அறிக்கையின்படி, நிதியாண்டு 2022-23-க்கான இந்தியாவின் GDP முன்கணிப்பு என்ன?**

அ. 6.1%

**ஆ. 6.6% ☑**

இ. 7.2%

ஈ. 7.5%

✓ பொருளியல் கூட்டுறவு மற்றும் வளர்ச்சிக்கான அமைப்பானது (OECD) நிதியாண்டு 2022–23க்கான இந்தியாவின் மொத்த உள்நாட்டு வளர்ச்சிக் கணிப்பை 6.9 சதவீதத்திலிருந்து 6.6 சதவீதமாகக் குறைத்துள்ளது. அதீத நடுத்தர கால உலகளாவிய நிச்சயமற்ற தன்மை மற்றும் உள்நாட்டுப் பொருளாதார நடவடிக்கைகளின் வேகக்குறைவு ஆகியவை இதற்கான காரணங்களாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. குறைந்துவரும் உலகளாவிய தேவை, பணவியல் கொள்கையின் கடுமை ஆகியவை இருந்தபோதிலும், 2022–23 நிதியாண்டில் G20இல் இந்தியா இரண்டாவது வேகமாக வளரும் பொருளாதாரமாக இருக்கும்.

**5. உலகளாவிய குறியீடுகளில் இந்தியாவின் தரவரிசை சரிவு குறித்து ஒரு திட்டமிடும் அறிக்கையை வெளியிட்ட நிறுவனம் எது?**

அ. NITI ஆயோக்

**ஆ. பிரதமருக்கான பொருளாதார ஆலோசனைக் குழு ☑**

இ. பொருளாதார விவகாரங்கள் துறை

ஈ. நிர்வாகச் சீர்திருத்தங்கள் மற்றும் பொதுமக்கள் குறைதீர்ப்புத் துறை

✓ பிரதமருக்கான பொருளாதார ஆலோசனைக் குழு, "உலகளாவிய கருத்துக் குறியீடுகளில் இந்தியா ஏன் மோசமாக செயல்படுகிறது: 3 கருத்து அடிப்படையிலான குறியீடுகளின் ஆய்வு" என்ற தலைப்பில் ஒரு திட்டமிடும் கட்டுரையை வெளியிட்டுள்ளது. குறியீடுகளில் பயன்படுத்தப்படும் முறையிலுள்ள சிக்கல்களின் காரணமாக பல உலகளாவிய குறியீடுகளில் இந்தியாவின் தரவரிசை சரிந்துள்ளதாக அது கூறுகிறது. உலகளாவிய சுதந்திரக் குறியீடு, V–DEM குறியீடுகள் மற்றும் EIU ஜனநாயகக் குறியீடு முதலான 3 குறியீடுகளை இது பகுப்பாய்வு செய்துள்ளது.

**6. பாம்புக்கடிபற்றிய ஓர் அண்மைய உலகளாவிய ஆய்வின்படி, பாம்புக்கடியால் இறந்தவர்களின் எண்ணிக்கை கீழ்க்காணும் எந்த நாட்டில் அதிகமாகப் பதிவாகியுள்ளது?**



அ. கானா

ஆ. இலங்கை

**இ. இந்தியா ☑**

ஈ. எகிப்து

✓ கடந்த 2019ஆம் ஆண்டில் பாம்புக்கடியால் உலகம் முழுவதும் 63,000–க்கும் அதிகமானோர் இறந்துள்ளனர் என்று ஒரு புதிய உலகளாவிய ஆய்வு கண்டறிந்துள்ளது. இந்த எண்ணிக்கையில் கிட்டத்தட்ட 51,000–க்கும் மேற்பட்டது இந்தியாவில் பதிவாகியுள்ளது. 'Global Burden of Disease'ஆல் இயற்றப்பட்ட இந்த ஆய்வில், பாம்புக்கடி நஞ்சு என்பது மிகவும் ஆபத்தான புறக்கணிக்கப்பட்ட வெப்பமண்டல நோய் ஆகும்.

**7. 2022ஆம் ஆண்டில், 'தேசிய பழங்குடியினர் நடன விழா'வை நடத்தும் மாநிலம் எது?**

அ. மத்திய பிரதேசம்

ஆ. அருணாச்சல பிரதேசம்

**இ. சத்தீஸ்கர் ☑**

ஈ. ஜார்கண்ட்

✓ சத்தீஸ்கர் மாநிலத்தின் இராய்ப்பூரில், 'தேசிய பழங்குடியினர் நடன விழா' அண்மையில் நடத்தப்பட்டது. இந்தத் திருவிழாவில் சுமார் 1 இலட்சம் பேர் கலந்துகொண்டனர். இந்தியா முழுவதிலுமிருந்தும் மொசாம்பிக், மங்கோலியா, டோங்கா, ரஷ்யா, இந்தோனேசியா, மாலத்தீவுகள், செர்பியா, நியூசிலாந்து மற்றும் எகிப்துபோன்ற நாடுகளிலிருந்தும் சுமார் 1,500 நடனக்கலைஞர்கள் இவ்விழாவில் பங்கேற்றனர்.

**8. உணவு மற்றும் உழவின் நிலை குறித்த அறிக்கையை வெளியிடுகிற நிறுவனம் எது?**

அ. UNEP

ஆ. UNFCCC

**இ. FAO ☑**

ஈ. உலக பொருளாதார மன்றம்

✓ "உணவு மற்றும் உழவின் நிலை" என்பது ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் உழவு அமைப்பின்மூலம் ஒவ்வோர் ஆண்டும் தயாரிக்கப்படும் முதன்மை அறிக்கைகளுள் ஒன்றாகும். அவ்வறிக்கையின் 2022ஆம் ஆண்டுக்கானப் பதிப்பு, நிலையான வளர்ச்சி இலக்குகளை (SDG) அடைவதற்கு நமது வேளாண் உணவு முறைகளில் தானியங்கு முறைமை எவ்வாறு பங்களிக்கும் என்பதைக் கூறுகிறது. நன்மைகளை அதிகப்படுத்துவது மற்றும் அபாயங்களைக் குறைப்பது எப்படி? என்பது குறித்து கொள்கை வகுப்பாளர்களுக்கு இது பரிந்துரைகளையும் வழங்குகிறது.

**9. 'புஷ்கர் மேளா' என்பது இந்தியாவின் எந்த மாநிலத்தில் நடைபெறும் ஒரு கலாச்சாரம் சார்ந்த கண்காட்சியாகும்?**



**அ. இராஜஸ்தான் ☑**

ஆ. பஞ்சாப்

இ. அஸ்ஸாம்

ஈ. கோவா

✓ 'புஷ்கர்' என்பது இராஜஸ்தான் மாநிலத்தின் மிகவும் ஈர்க்கத்தகும் சுற்றுலாத் தலங்களுள் ஒன்றாகும். இங்கு கலாச்சார நிகழ்வுகள், இயற்கை நடைகள், மணற்கலை திருவிழா, காத்தாடி திருவிழா, ஆண்டுதோறும் ஐந்து நாள் நடைபெறும் ஒட்டகம் மற்றும் கால்நடை கண்காட்சி ஆகியவை அக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களுக்கு இடையில் நடைபெறும். ஜெய்ப்பூரில், 'புஷ்கர் மேளா' கண்காட்சியை இராஜஸ்தான் மாநில முதலமைச்சர் அசோக் கெலாட் தொடக்கிவைத்தார். இந்த ஆண்டு, தோல் கழலை நோய் பரவும் காரணத்தால், எட்டு நாள் நிகழ்வில் புகழ்பெற்ற கால்நடை கண்காட்சி இடம்பெறாது.

**10. இந்திய தனித்துவ அடையாள ஆணையம் (UIDAI) அறிமுகப்படுத்திய புதிய இயலியின் (chatbot) பெயர் என்ன?**



அ. UIDAI பாரத்

**ஆ. ஆதார் மித்ரா ☑**

இ. ஆதார் திஷா

ஈ. ஆதார் பிரஷ்னா

✓ நிர்வாகச் சீர்திருத்தங்கள் மற்றும் பொதுமக்கள் குறைதீர்ப்புத்துறை வெளியிட்ட, 'குறைதீர்ப்பு குறியீட்டில்' இந்திய தனித்துவ அடையாள ஆணையமைப்பு (UIDAI) முதலிடம் பிடித்துள்ளது. UIDAI ஆனது இத்தரவரிசையில் தொடர்ந்து மூன்றாம் மாதமாக முதலிடத்தைப் பிடித்துள்ளது. UIDAI ஆனது 'ஆதார் மித்ரா' என்ற புதிய செயற்கை நுண்ணறிவு / எந்திரக்கற்றல் அடிப்படையிலான இயலியையும் அறிமுகப்படுத்தியது. இப்புதிய இயலி, ஆதார் பதிவு நிலையைச் சரிபார்த்தல், பதிவு மையத்தின் இருப்பிடம் அறிதல்போன்ற மேம்படுத்தப்பட்ட அம்சங்களுடன் வருகிறது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. மாநிலங்களின் புதிய கடன்களுக்கு 7.68% வட்டி விகிதம்**

இந்திய மாநில அரசுகள் ஏலத்தில் வெளியிட்ட கடன் பத்திரங்களின் சராசரி வட்டி விகிதம் அதிக மாற்றமில்லாமல் 7.68 சதவீதமாக இருந்தது.

---

**2. தமிழ்நாட்டின் முதல் பல்லுயிர் பாரம்பரியத் தளமானது மதுரை அரிட்டாபட்டி**

தமிழ்நாட்டின் மதுரை மாவட்டத்தில், அரிட்டாபட்டி மற்றும் மீனாட்சிபுரம் கிராமங்களிலுள்ள 193.215 ஹெக்டேர் பரப்பளவிலான பகுதியை அரிட்டாபட்டி பல்லுயிர் பாரம்பரியத் தளமாக தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது. இது தமிழ் நாட்டின் முதல் பல்லுயிர் பாரம்பரியத் தளமாகும்.

இது குறித்து தமிழ்நாட்டு அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், "பல்லுயிர் மரபுத்தளங்கள் என்பது, சூழலியல் முக்கியத்துவம் வாய்ந்த நிலப்பரப்பு, கடலோர மற்றும் உள்ளூர் நீர்நிலைகள், பல்லுயிர்த்தன்மைமிக்க தாவர, விலங்கின சிற்றினங்களின் வாழ்விடங்கள், பரிணாம முக்கியத்துவம் வாய்ந்த சிற்றினங்களின் வாழ்விடங்கள் போன்றவற்றைப் பாதுகாக்கும் நோக்கத்திற்காக அமைக்கப்பட்டது.

அரிட்டாபட்டி கிராமம் என்பது 7 சிறுகுன்றுகளை தொடர்ச்சியாக கொண்டுள்ள பகுதியாகும். இம்மலைக்குன்றுகளின் தனித்துவமான நிலப்பரப்பு இப்பகுதியின் முக்கிய நீராதாரப் பகுதியாகச் செயல்படுகிறது. 72 ஏரிகள், 200 இயற்கை நீரூற்று குளங்கள் மற்றும் மூன்று தடுப்பணைகள் உள்ளது. இங்குள்ள ஆனைகொண்டான் ஏரி, பதினாறாம் நூற்றாண்டில் பாண்டியர்களின் ஆட்சியில் உருவாக்கப்பட்டது.

அரிட்டாபட்டி கிராமத்தில் உள்ள மலைப்பகுதிகளில் 250 பறவையினங்கள் உள்ளன. இதில் லகர் இராசாளி, ஷாஹீன் இராசாளி, மற்றும் இராசாளிப்பருந்து ஆகிய மூன்று முதன்மையான கொன்றுண்ணிப் பறவையினங்கள் உள்ளன. எறும்புத்திண்ணிகள் (*Manis crassicaudata*), மலைப்பாம்பு (*Python molurus*) மற்றும் அரிய வகை தேவாங்கு (*Loris*) ஆகிய வனவுயிரிகளும் உள்ளன. இப்பகுதி பல பறவைகள் மற்றும் விலங்குகளின் வாழ்விடமாக உள்ளது.

இங்கு பல்வேறு சமண சிற்பங்கள், சமணர் படுக்கைகள், தமிழ் பிராமி கல்வெட்டுகள், வட்டெழுத்து கல்வெட்டுகள், 2200 ஆண்டுகள் பழைமையான குடைவரைக் கோவில்கள் உள்ளன. இந்த வரலாற்றுச் சின்னங்கள் இப்பகுதிக்கு கூடுதல் சிறப்பை அளிக்கின்றன.

---

**1. தணிக்கைத் தலைமை இயக்குநர் என்ற பதவியை உருவாக்கிய முதல் மாநிலம் எது?**

**அ. தமிழ்நாடு ☑**

ஆ. ஒடிஸா

இ. கேரளா

ஈ. இராஜஸ்தான்

✓ இந்தியாவிலேயே தணிக்கைத் தலைமை இயக்குநர் என்ற பதவியை உருவாக்கிய முதலாவது மாநிலம் தமிழ்நாடு ஆகும். இந்தப் பதவிக்காக இந்தியத் தணிக்கை மற்றும் கணக்கு சேவையிலிருந்து ஓர் அதிகாரியை தமிழ்நாடு அரசு நியமித்துள்ளது. தமிழ்நாட்டில் உள்ளக தணிக்கைத் துறைகளின் செயல்பாட்டை வலுப்படுத்துவதும் நெறிப்படுத்துவதும் இந்தப் புதிய அதிகாரியின் பொறுப்பாகும்.

**2. 'சின்–குகி–மிசோ' இனச் சமூகங்களுடன் தொடர்புடைய நாடு எது?**



அ. சீனா

ஆ. ரஷ்யா

**இ. வங்காளதேசம் ☑**

ஈ. தாய்லாந்து

✓ வங்காளதேச பாதுகாப்புப் படையினருக்கும் குகி–சின் தேசிய இராணுவத்திற்கும் இடையிலான சண்டையைத் தொடர்ந்து, சின்–குகி இனத்தைச் சேர்ந்த பழங்குடியினர்கள் வங்காளதேசத்தை விட்டு வெளியேறி வருகின்றனர். வங்காளதேசத்திலிருந்து வெளியேறிய 274 வங்கதேச பழங்குடியினருக்கு தற்காலிக தங்குமிடம், உணவு மற்றும் நிவாரணம் வழங்குவதாக மிசோரம் அரசு அறிவித்துள்ளது.

**3. 'ஆபரேஷன் டர்ட்ஷீல்டு' என்றவொன்றைத் தொடங்கிய நாடு எது?**



அ. சீனா


**ஆ. இந்தியா ☑**

இ. ரஷ்யா

ஈ. இந்தோனேசியா

✓ அழிந்துவரும் வனவிலங்குகள் மற்றும் தாவரங்களின் (CITES) சர்வதேச வர்த்தகம் தொடர்பான கூட்டமைப்பிற்கான கட்சிகளின் மாநாட்டின் (CoP–19) 19ஆவது கூட்டம் பனாமா நகரத்தில் நடைபெற்றது. நன்னீர் ஆமையான, 'படகுர் கச்சுகா'வை இதில் இணைப்பதற்கான இந்தியாவின் முன்மொழிவு, CITESஇன் CoP–19இல் உள்ள கட்சிகளின் ஆதரவைப்பெற்றது. நன்னீர் ஆமைகளை வேட்டையாடுதல் மற்றும் அதன் சட்டவிரோத வர்த்தகத்தை ஒழிப்பது ஆகிய நோக்கத்திற்காக, 'ஆபரேஷன் டர்ட்ஷீல்ட்' என்றவொன்றைத் தொடங்கியது. இது குறித்து CITES இந்தியாவைப் பாராட்டியது.

**4. 'ஓரியன்' விண்கலத்தை ஏவிய நாடு எது?**




அ. ஜப்பான்

**ஆ. அமெரிக்கா ☑**

இ. ஐக்கிய அரபு அமீரகம்

ஈ. இஸ்ரேல்

✓ NASAஇன் ஓரியன் விண்கலம் ஆர்ட்டெமிஸ்–I திட்டத்தின் ஒருபகுதியாக தனது முதல் நிலவு இலக்கு அணுகலை வெற்றிகரமாகச் செய்துள்ளது. இது நிலவின் மேற்பரப்பிலிருந்து 130 கிமீட்டர் தொலைவில் கடந்துள்ளது. ஓரியன் நிலவுக்கு அப்பால் சுமார் 57,287 மைல்கள் தொலைவில் பயணம் செய்து அப்பல்லோ–13இன் சாதனையை விஞ்சும். ஓரியன் விண்கலமானது நிலவுக்கு அப்பால் உள்ள தொலைதூர பிற்போக்குச் சுற்றுப்பாதையில் நுழையும்.


**5. ஐரோப்பிய நாடாளுமன்றம் கீழ்க்காணும் எந்த நாட்டை பயங்கரவாதத்தின் அரச ஆதரவாளராக அறிவித்துள்ளது?**

அ. சீனா

**ஆ. ரஷ்யா ☑**

இ. ஆப்கானிஸ்தான்

ஈ. பாகிஸ்தான்



✓ ஐரோப்பிய நாடாளுமன்றமானது ரஷ்யாவை பயங்கரவாதத்தின் அரச ஆதரவாளராக அறிவித்துள்ளது. எரிசக்தி உட்கட்டமைப்பு, மருத்துவமனைகள், பள்ளிகள் மற்றும் தங்குமிடங்கள்போன்ற உக்ரேனிய இலக்குகள் மீதான அதன் இராணுவத் தாக்குதல்கள் சர்வதேச சட்டத்தை மீறுவதாக வாதிடுகிறது. ஐரோப்பிய ஒன்றியம் இதற்கான ஒரு சட்ட ரீதியான கட்டமைப்பைக் கொண்டிருக்கவில்லை என்றாலும், உக்ரைன் மீதான ரஷ்யாவின் ஆக்கிரமிப்பு தொடர்பாக ரஷ்யா மீது முன்னெப்போதும் இல்லாத பொருளாதாரத் தடைகளை அது ஏற்கனவே விதித்துள்ளது.

**6. உலகின் முதல் வேத கடிகாரம் கட்டப்படுகிற நகரம் எது?**

அ. காஞ்சிபுரம்

ஆ. ஜெய்ப்பூர்

**இ. உஜ்ஜைனி ☑**

ஈ. துவாரகா



✓ உலகின் முதல் வேத கடிகாரத்தின் கட்டுமானப் பணிக்கான அடிக்கல், மத்திய பிரதேச மாநிலத்தின் உஜ்ஜைனி நகரத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஜந்தர் மந்தர் அரசு ஜிவாஜி ஆய்வகத்தில் ₹1.62 கோடி செலவில் 'வேத கடிகாரம்' நிறுவப்படும். இந்தக் கடிகாரம் வேதகால கணக்கீட்டுக் கொள்கைகளின் அடிப்படையில் நிர்ணயிக்கப்படும். வேத கடிகாரத்தின் பயன்பாடு சந்திரனின் நிலை, பண்டிகை, மங்கள நேரம், பிறந்தநாள், விரதம், பண்டிகை முக்கிய விடுமுறை நாட்களில் பயன்படுத்தப்படும்.

**7. 2022ஆம் ஆண்டில், 'ரைசிங் சன் வாட்டர் ஃபெஸ்ட்' நிகழ்ச்சியை நடத்திய மாநிலம் எது?**

**அ. மேகாலயா ☑**

ஆ. மேற்கு வங்காளம்

இ. மகாராஷ்டிரா

ஈ. இராஜஸ்தான்



✓ ரைசிங் சன் வாட்டர் ஃபெஸ்ட்–2022 ஆனது மேகாலயா மாநிலத்தில் உமியாம் ஏரியில் நடைபெற்றது. மூன்று நாள் நடைபெற்ற இந்த நீர் விளையாட்டு மற்றும் கலாச்சார கண்காட்சி வடகிழக்கு மாநிலங்களில் நடைபெறுவது இதுவே முதன்முறையாகும். வடகிழக்கு மாநிலங்களைச் சார்ந்த இளையோர் படகோட்டம்போன்ற நீர் விளையாட்டுகளில் ஈடுபட ஊக்குவிப்பதே இதன் நோக்கமாகும். இது வடகிழக்கில் சுற்றுலாவை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. இது அஸ்ஸாம் மற்றும் மேகாலயா மாநில அரசாங்கங்களுடன் இணைந்த இந்திய இராணுவத்தின் கிழக்குப் படையின் முனைவாகும்.

**8. இந்தியாவின் முதல் வாக்காளரான மாஸ்டர் ஷியாம் சரண் நேகி சார்ந்த மாநிலம் எது?**



அ. அஸ்ஸாம்


**ஆ. ஹிமாச்சல பிரதேசம் ☑**

இ. மேற்கு வங்கம்

ஈ. குஜராத்

✓ நாட்டின் முதல் வாக்காளரான 106 வயதான மாஸ்டர் ஷியாம் சரண் நேகி அண்மையில் காலமானார். அவர் ஹிமாச்சல பிரதேசத்தின் கின்னௌர் மாவட்டத்தில் வசித்தார். அவரது இறுதிச்சடங்குகளை மாவட்ட நிர்வாகம் முழு மரியாதையுடன் மேற்கொண்டது. நேகி, ஹிமாச்சல பிரதேச சட்டமன்றத் தேர்தலுக்காக தபால் வாக்குமூலம் மூன்று நாட்களுக்கு முன்னர்தான் வாக்களித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

**9. உலகம் முழுவதும், 'உலக கதிரியக்க வரைவியல் நாள்' அனுசரிக்கப்படுகிற தேதி எது?**



அ. நவம்பர்.05

**ஆ. நவம்பர்.08 ☑**

இ. நவம்பர்.15

ஈ. நவம்பர்.25

✓ உலக கதிரியக்க வரைவியல் நாளானது ஒவ்வோர் ஆண்டும் நவ.08 அன்று, X–கதிர் கண்டுபிடிக்கப்பட்டதை நினைவைக் குறிக்கிறது. கடினமாக உழைக்கும் கதிரியக்க வரைவியலாளர்கள் / கதிரியக்க நிபுணர்களையும் இந்நாள் கொண்டாடுகிறது. ஜெர்மனி பேராசிரியர் வில்ஹெம் இரான்ட்ஜென் என்பவரால் கடந்த 1895ஆம் ஆண்டில் X–கதிர் தற்செயலாக கண்டுபிடிக்கப்பட்டது.

**10. ஐநா பொதுச்சபையால் சிறார் பாலியல், வன்கொடுமை/வன்முறையைத்தடுப்பதற்கும் குணப்படுத்துவதற்குமான உலக நாள் என அறிவிக்கப்பட்ட தேதி எது?**



அ. நவம்பர்.15

**ஆ. நவம்பர்.18 ☑**

இ. நவம்பர்.25

ஈ. நவம்பர்.27

✓ ஐக்கிய நாடுகளின் பொதுச்சபையானது நவ.18ஆம் தேதியை "சிறார் பாலியல், வன்கொடுமை / வன்முறையைத் தடுப்பதற்கும் குணப்படுத்துவதற்குமான உலக நாள் – World Day for the Prevention of and Healing from Child Sexual Exploitation, Abuse and Violence" என அறிவித்துள்ளது. சிறார் பாலியல் வன்கொடுமையின் பாதிப்புகளை உலகளாவியப் பார்வையைக் கொண்டுவருவதை இந்த நாள் தனது நோக்கமாகக் கொண்டுள்ளது.

---

## செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. விடுதலையின் அமுதப்பெருவிழாவின்கீழ், சங்கீத நாடக அகாடமி அமுத விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. தமிழ்நாட்டைச் சார்ந்த ஐந்து பேருக்கு விருதுகள் அறிவிப்பு.**

75 ஆண்டு இந்திய விடுதலையின் அமுதப்பெருவிழாவின்கீழ், 75 கலைஞர்களுக்கு சங்கீத நாடக அகாடமி அமுதா விருதுகளை சங்கீத நாடக அகாடமி அறிவித்துள்ளது. இந்தியாவின் பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த 75 வயதுக்கு மேற்பட்ட, இதுவரை தேசிய அளவிலான விருதுகளைப் பெறாத கலைஞர்களைக் கௌரவிக்கும் வகையில், இந்த

விருதுகள் வழங்கப்படவுள்ளன. இந்த விருதுக்கு தேர்வானவர்களுக்கு ₹1 லட்சம் ரொக்கப்பரிசும், தாமிரப்பத்திரமும், அங்கவஸ்திரமும் வழங்கப்படும்.

இந்த விருதுக்கு தமிழ்நாட்டைச் சேர்ந்த ஆச்சாள்புரம் சின்னத்தம்பி (நாதஸ்வரம்), புருசை சுப்பிரமணியம் (தெருக் கூத்து), சுந்தரேசன் இராமமூர்த்தி (நாடக நடிகர்), வி ஏ கே இரங்காராவ் (நடன இசை), பி இரமணி (வீணை இசை) ஆகிய கலைஞர்களுக்கு இவ்விருது வழங்கப்படுகிறது. புதுச்சேரிசார் நாடக இசைக்கலைஞர் கே எம் சுப்பையா, பொம்மலாட்டக் கலைஞர் வீராசாமி சீனிவாசன் ஆகியோரும் இந்த விருதுக்குத் தேர்வுசெய்யப்பட்டுள்ளனர்.

---

**2. நாளை விண்ணில் பாய்கிறது பிஎஸ்எல்வி சி–54**

புவிக்கண்காணிப்பு செயற்கைக்கோள், எட்டுச் சிறிய இரக செயற்கைக்கோள்களுடன் பிஎஸ்எல்வி சி–54 ஏவுகலம் நவ.26 அன்று விண்ணில் ஏவப்படுகிறது. ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவண் ஆராய்ச்சி மைய ஏவுதளத்தில் இருந்து அந்த ஏவுகலம் செலுத்தப்படவிருக்கிறது.

புவிக் கண்காணிப்புக்கான இஓஎஸ்–06 (ஓசோன்சாட்–3) என்ற நவீன செயற்கைக்கோள் அதில் பிரதானமாக இடம்பெற்றுள்ளது. இதை ISRO வடிவமைத்துள்ளது. இதுதவிர, அமெரிக்காவின் ஆஸ்ட்ரோகாஸ்ட், இந்தியா–பூடான் கூட்டுத்தயாரிப்பான ஐஎன்எஸ்–2பி, துருவா ஸ்பேஸ் நிறுவனத்தின் தைபோல்ட், பிக்சலின் ஆனந்த் உள்பட 8 நானோ செயற்கைக்கோள்களும் பிஎஸ்எல்வி சி–54 ஏவுகலம்மூலம் வெவ்வேறு சுற்றுப்பாதைகளில் விண்ணில் நிலைநிறுத்தப்படவுள்ளன.

இஓஎஸ்–06 செயற்கைக்கோள் 1,117 கிலோ எடைகொண்டது. ஓசோன்சாட் வரிசையில் அனுப்பப்படும் 4ஆவது செயற்கைக்கோள் இதுவாகும். கடலின் தன்மை, அதன் மேற்பரப்பு, வெப்பநிலை, காற்றின்திசை மாறுபாடுகள், வளி மண்டலத்தின் நிகழும் ஒளியியல் மாற்றங்கள் போன்றவற்றைத் தொடர்ந்து கண்காணித்து தகவல்களை அந்தச் செயற்கைக்கோள் அளிக்கவல்லது. அதேபோல், இந்தியா–பூடான் ஒருங்கிணைந்த ஆராய்ச்சியின்கீழ் வடிவமைக்கப்பட்ட ஐஎன்எஸ்–2பி செயற்கைக் கோளும் விண்ணில் செலுத்தப்படவுள்ளது.

---

**1. 'Sonzal–2022' என்பது கீழ்க்காணும் எம்மாநிலம்/UTஇல் ஆண்டுதோறும் நிகழும் ஓர் இளையோர் விழாவாகும்?**



**அ. ஜம்மு & காஷ்மீர் ☑**

ஆ. ஒடிஸா

இ. கேரளா

ஈ. இராஜஸ்தான்

✓ ஜம்மு–காஷ்மீரின் துணைநிலை ஆளுநர் மனோஜ் சின்ஹா, காஷ்மீர் பல்கலைக்கழகத்தில் ஆண்டுதோறும் நடைபெறும் இளையோர் திருவிழாவான, 'சோன்சல்–2022'ஐ தொடக்கிவைத்தார். இளம் கலைஞர்கள் தங்கள் திறமைகளை வெளிக்கொணர ஒரு வாய்ப்பாக இவ்விழா அமைகிறது. மேலும், 'ஒரே பாரதம் ஒப்பிலா பாரதம்' என்ற கனவை அடைவதற்கான ஒரு தளத்தை 'சோன்சல்' விழா வழங்குகிறது.

**2. யாரின் பிறந்தநாளை நினைவுகூரும் வகையில், 'தேசிய பால் நாள்' அனுசரிக்கப்படுகிறது?**

அ. M S சுவாமிநாதன்



**ஆ. Dr வர்கீஸ் குரியன் ☑**

இ. சரண் சிங்

ஈ. மொரார்ஜி தேசாய்

✓ "இந்தியாவின் பால்காரர்" என்று அழைக்கப்படும் "இந்தியாவின் வெண்மைப்புரட்சியின் தந்தை" Dr வர்கீஸ் குரியன் அவர்களின் 101ஆவது பிறந்தநாளை நினைவுகூரும் வகையில், 'தேசிய பால் நாள்' அனுசரிக்கப்படுகிறது. இந்த நாளின்போது மதிப்புமிக்க, 'தேசிய கோபால் ரத்னா விருதுகள்' வழங்கப்படுகின்றன. கர்நாடக மாநிலத்தில் நடக்கும் இந்தத் தேசிய நிகழ்வில், வர்கீஸ் குரியன் வாழ்க்கை குறித்த வரலாற்று நூல் மற்றும் பாலில் செய்யப்படும் கலப்படம் குறித்த சிறுநூலும் வெளியிடப்படவுள்ளது.

**3. இந்தியாவின் முதலாவது இரவு வான் சரணாலயம் அமைந்துள்ள மாநிலம்/யூனியன் பிரதேசம் எது?**

அ. ஹிமாச்சல பிரதேசம்



ஆ. சிக்கிம்

இ. உத்தரகாண்ட்

**ஈ. லடாக் ☑**

✓ இந்தியாவின் முதல் இரவு வான் சரணாலயம் லடாக்கின் ஹான்லேயில் நடுவண் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகத்தின் கீழுள்ள அறிவியல் & தொழில்துறை ஆராய்ச்சிக் கவுன்சிலால் நிறுவப்படுகிறது. திட்டமிடப்பட்ட இந்த இரவு வான் சரணலாயத்தின் காப்பகம், சாங்தாங் வனவுயிரிகள் சரணாலயத்தின் ஒருபகுதியாக ஹான்லேயில் அமைக்கப்படும். இது இந்தியாவில் வானவியல்–சுற்றுலாவை மேம்படுத்தும். ஆப்டிகல், அகச்சிவப்புக்கதிர் மற்றும் காமா கதிர் தொலைநோக்கிகளுக்கான உலகின் மிகவுயர்ந்த தளங்களுள் ஒன்றாக இது இருக்கும்.

**4. 27 ஆண்டுகால இயற்கை எரிவாயு வழங்கல் ஒப்பந்தத்தில் சீனாவுடன் கூட்டு சேர்ந்துள்ள நாடு எது?**

அ. ஐக்கிய அரபு அமீரகம்



**ஆ. கத்தார் ☑**

இ. ஈரான்

ஈ. ரஷ்யா

✓ கத்தார் ஆற்றல் நிறுவனமானது சீனாவுடனான 27 ஆண்டுகால இயற்கை எரிவாயு வழங்கல் ஒப்பந்தத்தை அறிவித்தது. இன்றுவரை கையெழுத்திடப்பட்ட மிகநீண்ட கால எரிவாயு வழங்கல் ஒப்பந்தம் இதுவாகும். கத்தார் ஆற்றல் நிறுவனமானது அதன் புதிய வடகள கிழக்குத் திட்டத்திலிருந்து ஆண்டுதோறும் நான்கு மில்லியன் டன் திரவமாக்கப்பட்ட இயற்கை எரிவாயுவை சீன பெட்ரோலியம் & கெமிக்கல் கார்ப்பரேஷனுக்கு (சினோபெக்) அனுப்பும்.

**5. இந்தியாவில், 'அரசியலமைப்பு நாள்' கொண்டாடப்படுகிற தேதி எது?**

அ. நவம்பர்.24

**ஆ. நவம்பர்.26 ☑**

இ. நவம்பர்.30

ஈ. டிசம்பர்.01



✓ கடந்த 1949ஆம் ஆண்டு இந்திய அரசியலமைப்புச்சட்டத்தை அரசியலமைப்பு சபை ஏற்றுக்கொண்டதன் நினைவாக கடந்த 2015ஆம் ஆண்டு முதல் ஒவ்வோர் ஆண்டும் நவ.26 அன்று அரசியலமைப்பு நாள் அனுசரிக்கப்படுகிறது. முன்னர் இந்த நாள் சட்ட நாளாக அனுசரிக்கப்பட்டது. இந்த நாளின்போது, 'விர்ச்சுவல் ஜஸ்டிஸ் கடிகாரம்', 'JustIS' திறன்பேசி செயலி 2.0, டிஜிட்டல் கோர்ட் மற்றும் 'S3WaaS' இணையதளங்கள் உள்ளிட்ட இ–கோர்ட் திட்டத்தின் கீழ் புதிய முயற்சிகளை பிரதமர் தொடங்குவார்.

**6. 2022இல் 26ஆவது சர்வதேச மலபார் கடற்படை பயிற்சியை நடத்தும் நாடு எது?**

அ. ஆஸ்திரேலியா

**ஆ. ஜப்பான் ☑**

இ. இந்தியா

ஈ. அமெரிக்கா



✓ ஜப்பானின் யோகோசுகாவில் தொடங்கும் 26ஆம் சர்வதேச மலபார் கடற்படை பயிற்சியில் இந்தியா பங்கேற்கிறது. மலபார் கடற்படை பயிற்சியில் ஆஸ்திரேலியா, ஜப்பான் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளும் பங்கேற்கின்றன. மலபார் பயிற்சியானது கடந்த 1992ஆம் ஆண்டில் இந்தியா மற்றும் அமெரிக்க கடற்படைகளுக்கு இடையே தொடங்கப்பட்டது. இந்திய கடற்படைக் கப்பல்களான INS ஷிவாலிக் மற்றும் INS கமோர்டாவுடன் இந்தியா இந்தப் பயிற்சியில் ஈடுபட்டுள்ளது.

**7. 'நங்கனா சாஹிப்' என்பது கீழ்க்காணும் எந்த நாட்டில் அமைந்துள்ள சீக்கியர்களின் புனிதத்தலமாகும்?**

அ. இந்தியா

**ஆ. பாகிஸ்தான் ☑**

இ. நேபாளம்

ஈ. வங்காளதேசம்



✓ குருபுரப் பண்டிகையையொட்டி பாகிஸ்தானில் உள்ள நங்கனா சாஹிப்பிற்கு இந்திய சீக்கிய யாத்ரீகர்கள் வருகை தருவதற்கு நடுவண் உள்துறை அமைச்சகம் வசதி செய்துள்ளது. மொத்தம் 2420 இந்திய சீக்கிய யாத்ரீகர்கள் பத்து நாள் பாகிஸ்தான் யாத்திரை நுழைவு இசைவுடன் குருநானக் ஜெயந்தி விழாவில் பங்கேற்பதற்காக பாகிஸ்தானுக்கு புறப்பட்டனர். பாகிஸ்தானில் உள்ள ஸ்ரீ கர்தார்பூர் சாஹிப் குருத்வாராவிற்கு குருபுரப் பண்டிகையையொட்டி இந்தியாவில் இருந்து மொத்தம் 433 யாத்ரீகர்கள் வருகை தந்துள்ளனர்.

**8. ஆனைமலை புலிகள் காப்பகம் அமைந்துள்ள மாநிலம் எது?**

**அ. தமிழ்நாடு ☑**



ஆ. கேரளம்

இ. மேற்கு வங்கம்

ஈ. குஜராத்

✓ ஆனைமலை புலிகள் காப்பகமானது யானைகளைத் தத்தெடுக்கும் திட்டத்தை தொடங்கியுள்ளது. இந்தத் திட்டத்தின் கீழ் அரசு சாரா நிறுவனங்கள், நிறுவனங்கள், அறக்கட்டளைகள் அல்லது தனிநபர்கள் வனத்துறையின் முகாம் யானைகளின் செலவுகளுக்கு நிதியுதவி செய்யலாம். உணவுகள், மருந்துகள், சுகாதாரப் பொருட்கள் மற்றும் பிற தற்செயலான செலவுகளை அவர்கள் ஏற்றுக்கொள்வர். யானைகளைத் தத்தெடுக்க விரும்புவோர்க்கு வருமான வரிச்சட்டம், 1961இன் 80ஜி பிரிவின்கீழ் விலக்களிக்கப்படும்.

**9. மதுரா–பிருந்தாவனம் என்ற புனித யாத்திரை தலம் அமைந்துள்ள மாநிலம் எது?**

அ. குஜராத்



ஆ. உத்தரகாண்ட்

**இ. உத்தர பிரதேசம் ☑**

ஈ. பஞ்சாப்

✓ இந்தியாவின் முக்கிய புனித யாத்திரை தலங்களுள் ஒன்றான மதுரா–பிருந்தாவனம், 2041ஆம் ஆண்டுக்குள், 'நிகர சுழிய கரியமிலவாயு ($CO_2$) உமிழ்வு' சுற்றுலாத்தலமாக மாறுவதை இலக்காகக் கொண்டுள்ளது. உத்தர பிரதேச மாநில அரசாங்கத்தின்படி, வரைவு மறுவடிவமைப்புத் திட்டத்தில் சுற்றுலா வாகனங்களுக்குத் தடைவிதிக்கவும், பொதுமக்களை மின்சார வாகனங்களில் வரச்சொல்லி ஊக்கப்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. மதுரா–பிருந்தா வனத்திற்கு ஆண்டுதோறும் வருகைதரும் சுற்றுலாப்பயணிகளின் எண்ணிக்கை உயர்ந்து வருகிறது. அந்த எண்ணிக்கை 2041ஆம் ஆண்டுவாக்கில் ஆறு கோடியாக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**10. 'முதலமைச்சர் தேவதர்ஷன் யாத்ரா யோஜனா'வைத் தொடங்கியுள்ள மாநிலம்/யூனியன் பிரதேசம் எது?**

**அ. கோவா ☑**

ஆ. புது தில்லி

இ. உத்தர பிரதேசம்

ஈ. குஜராத்

✓ கோவா மாநில அரசாங்கம், 'முதலமைச்சர் தேவதர்ஷன் யாத்ரா யோஜனா' என்ற பெயருடைய மக்களுக்காக அரசாங்கத்தால் வழங்கப்படும் புனித யாத்திரைத்திட்டத்தை முறையாகத் தொடங்கியுள்ளது. இத்திட்டத்தின்கீழ், 50 வயதுக்கு மேற்பட்டவர்கள் விண்ணப்பிக்க தகுதியுடையவர்கள். சுற்றுலாவின்போது யாத்ரீகர்களின் உணவு மற்றும் தங்குவதற்கு மாநில அரசு நிதியுதவி அளிக்கும். இந்தத் திட்டத்தின்கீழ் திருப்பதிக்குப் பயணிகளை ஏற்றிச் செல்லும் பேருந்தை முதலமைச்சர் பிரமோத் சாவந்த் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. 'பத்மஸ்ரீ', 'கேல் இரத்னா' விருதுபெற்ற முனைவர் (கௌரவ பட்டம்) தீபா மாலிக், காசநோய் இல்லாத இந்தியா இயக்கத்தின் தேசிய தூதராகி உள்ளார்.**

'பத்மஸ்ரீ', 'கேல் இரத்னா' விருதுபெற்ற, இந்தியாவின் முதலாவது மகளிர் பாராலிம்பிக் பட்டம் வென்ற, இந்திய பாரா லிம்பிக் குழுவின் தலைவரான முனைவர் (கௌரவ பட்டம்) தீபா மாலிக், காசநோய் இல்லாத இந்தியா இயக்கத்தின் தேசிய தூதராகி உள்ளார். இந்த இயக்கத்திற்கு முழு ஆதரவளிக்க அவர் உறுதிபூண்டுள்ளார்.

---

**2. "ஆஸ்த்ரா ஹிந்த்–22" கூட்டு இராணுவப்பயிற்சியில் கலந்துகொள்ளும் ஆஸ்திரேலிய வீரர்கள் இந்தியா வருகை**

இந்திய மற்றும் ஆஸ்திரேலிய இராணுவத்திற்கு இடையே, "ஆஸ்த்ரா ஹிந்த்–22" என்ற கூட்டு பயிற்சி ராஜஸ்தான் மாநிலத்தில் 2022 நவ.28 முதல் டிச.11 வரை நடைபெறவுள்ளது. இரு இராணுவங்களின் அனைத்து படைகளும் கலந்து கொள்ளும் முதல் பயிற்சி, இது. இந்திய இராணுவத்தின் டோக்ரா படை, இந்தப் பயிற்சியில் கலந்துகொள்ள உள்ளது. ஆஸ்த்ரா ஹிந்த் பயிற்சி, ஆண்டுதோறும் ஆஸ்திரலியாவிலும் இந்தியாவிலும் மாறிமாறி நடைபெற்று வருகிறது. நேர்மறையான இராணுவ உறவைக் கட்டமைப்பது, சிறந்த நடைமுறைகளைப் பின்பற்றுவது மற்றும் இணைந்து பணியாற்றும் திறனை ஊக்குவிப்பது முதலியவை இந்தப்பயிற்சியின் நோக்கமாகும்.

---

**3. எழுத்தாளர் இமையத்துக்கு குவெம்பு விருது**

'குவெம்பு இராஷ்டிரிய புராஸ்கர்' தேசிய விருதைப் பெறும் முதல் தமிழ் எழுத்தாளர் என்ற பெருமையைப் பெற்ற எழுத்தாளர் இமையம்.

'குவெம்பு' என்ற தமது புனைப்பெயராலும் சுருக்கமாக கே வி புட்டப்பா என்றும் பரவலாக அறியப்படும் குப்பளி வெங்கடப்ப கௌடா புட்டப்பா அவர்கள், கன்னட மொழியின் புகழ்பெற்ற எழுத்தாளர். இவரின் நினைவைப் போற்றும் வகையில் குவெம்பு அவர்களின் நினைவு அறக்கட்டளை சார்பாக, 2013ஆம் அண்டு முதல் 'குவெம்பு இராஷ்டிரிய புராஸ்கர் தேசிய விருது' வழங்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் தற்போது இந்த ஆண்டிற்கான (2022) 'குவெம்பு இராஷ்டிரிய புராஸ்கர் தேசிய விருது' சாகித்திய அகாதெமி விருதுபெற்ற இமையம் என்கிற வெ அண்ணாமலை அவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இந்த விருதுடன் பரிசுத்தொகையாக ₹5 இலட்சமும் வெள்ளிப்பதக்கமும் வழங்கப்படவிருக்கிறது. இந்த விருதைப் பெறுவதன்மூலம் 'குவெம்பு இராஷ்டிரிய புராஸ்கர்' தேசிய விருதைப்பெறும் முதல் தமிழ் எழுத்தாளர் என்ற பெருமையையும் பெறுபவராவார் எழுத்தாளர் இமையம்.

---

**4. 9 செயற்கைக்கோள்களின் முக்கியப் பயன்கள் என்ன?**

பிஎஸ்எல்வி சி54 ஏவுகலம் வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டு, செயற்கைக்கோள்கள் வெற்றிகரமாக அதன் சுற்றுவட்டப் பாதையில் நிலைநிறுத்தப்பட்டுள்ளன.

புவி கண்காணிப்புக்காக விண்ணில் ஏவப்பட்டுள்ள இஓஎஸ்–06 செயற்கைக்கோளில் பயன்படுத்தப்பட்டுள்ள அதி நவீன ஆர்கோஸ் தொழில்நுட்பம் மற்றும் கு–பேண்ட்மூலம் கடலில் ஏற்படும் வெப்பநிலை மாற்றம், காற்றின் வேகம் ஆகியவை கண்காணிக்கப்படும். மேலும், இது கடல் நிறம், காற்றின் திசை மாறுபாடுகள், வளிமண்டலத்தில் நிகழும் ஒளியியல் மாற்றங்கள் உள்ளிட்ட செயல்பாடுகளை தொடர்ந்து கண்காணித்து தரவுகளை வழங்கும்.

**ஐஎன்எஸ் 2பி:** இந்தியா–பூடான் ஒப்பந்தத்தின் அடிப்படையில், ஐஎன்எஸ் 2பி இரண்டு நானோ செயற்கைக்கோள் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்தச் செயற்கைக்கோள் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சிக்காக விண்ணில் ஏவப்பட்டு உள்ளது.

**ஆனந்த் சாட்:** பெங்களூரைச் சேர்ந்த விண்வெளி தொழில்நுட்ப துளிர் நிறுவனமான, 'பிக்செல்', ஆனந்த் செயற்கைக் கோளை வடிவமைத்துள்ளது. நாட்டின் முதல் தனியார் புவி கண்காணிப்புச் செயற்கைக்கோள் இதுவாகும். இந்தச்

செயற்கைக்கோளில் அதிநவீன கேமரா பொருத்தப்பட்டுள்ளது. அதன்மூலம், பூமியை விரிவாக படம்பிடிக்க முடியும். குறைந்த வட்டப்பாதையில் செயற்கைக்கோள் சுற்றிவரும்.

**தைபோல்ட்:** ஹைதராபாதைச் சார்ந்த துளிர் நிறுவனமான துருவா ஸ்பேஸ் உருவாக்கிய தைபோல்ட் 2 செயற்கைக் கோள்கள், தகவல் தொழில்நுட்ப ஆராய்ச்சிக்காக ஏவப்பட்டுள்ளன. இச்செயற்கைக்கோளின் ஆயுட்காலம் ஓராண்டு ஆகும்.

**ஆஸ்ரோகாஸ்ட் நான்கு செயற்கைக்கோள்:** அமெரிக்காவின் ஸ்பேஸ் ப்ளைட்டின் செயற்கைக்கோள். தொழில்நுட்ப ஆராய்ச்சி மேம்பாட்டுக்காக ஆஸ்ரோகாஸ்ட் விண்ணுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

---

**5. கோதுமை, எண்ணெய் வித்துக்கள் சாகுபடி பரப்பு 10%–க்கு மேல் அதிகரிப்பு**

நடப்பு இஇரபி பருவத்தில் கோதுமை மற்றும் எண்ணெய் வித்துக்கள் சாகுபடி பரப்பு 10 சதவீதத்துக்கு மேல் உயர்ந்து உள்ளது என்று நடுவண் வேளாண் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

ஆண்டுதோறும் அக்டோபரில் பிரதான இஇரபி பயிரான கோதுமை சாகுபடி தொடங்குகிறது. அதன் அறுவடை மார்ச்–ஏப்ரலில் நடைபெறுகிறது. 2022–23ஆம் பயிராண்டின் (ஜூலை முதல் ஜூன்) இரபி பருவத்தில் கோதுமையைத்தவிர, பயறு, கடுகு ஆகிய வேறு முக்கிய பயிர்களும் சாகுபடி செய்யப்படுகின்றன.

இந்நிலையில், நடுவண் வேளாண் அமைச்சகம் வெளியிட்ட புள்ளிவிவரத்தில், இந்த ஆண்டின் இஇரபி பருவத்தில் கோதுமை சாகுபடி பரப்பு 10.5 சதவீதம், எண்ணெய் வித்துக்கள் சாகுபடி பரப்பு 13.58 சதவீதம் உயர்ந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

**பயிர் கடந்த ஆண்டு சாகுபடி பரப்பு நிகழாண்டு சாகுபடி பரப்பு (நவ.25 வரை)**

கோதுமை 138.35 இலட்சம் ஹெக்டேர் 152.88 இலட்சம் ஹெக்டேர்

நெல் 8.33 இலட்சம் ஹெக்டேர் 9.14 இலட்சம் ஹெக்டேர்

எண்ணெய் வித்துக்கள் 66.71 இலட்சம் ஹெக்டேர் 75.77 இலட்சம் ஹெக்டேர்

பயறு வகைகள் 94.37 இலட்சம் ஹெக்டேர் 94.26 இலட்சம் ஹெக்டேர்

சோளம், வாற்கோதுமை போன்ற தானியங்கள் 26.70 இலட்சம் ஹெக்டேர் 26.54 இலட்சம் ஹெக்டேர்

**நிகழாண்டு அதிக அளவில் கோதுமை சாகுபடி செய்யப்பட்டுள்ள மாநிலங்கள் (நவ.25 வரை)**

மத்திய பிரதேசம்–6.40 இலட்சம் ஹெக்டேர்

இராஜஸ்தான்–5.67 இலட்சம் ஹெக்டேர்

பஞ்சாப்–1.55 இலட்சம் ஹெக்டேர்

எண்ணெய் வித்துக்களில் இந்த ஆண்டு 70.89 இலட்சம் ஹெக்டேர் பரப்பில் கடுகு சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இது கடந்த ஆண்டு 61.96 இலட்சம் ஹெக்டேராக இருந்தது.

நடப்பு பருவத்தில், இதுவரை அனைத்து இரபி பயிர்களின் சாகுபடி பரப்பு 358.59 இலட்சம் ஹெக்டேராகும். இது கடந்த ஆண்டின் 334.46 இலட்சம் ஹெக்டேரைவிட 7.21 சதவீதம் அதிகம்.

**இரபி பயிர்கள் சாகுபடி பரப்பு 24 இலட்சம் ஹெக்டேர் அதிகரிப்பு:**

கடந்த ஆண்டு இரபி பருவத்தின் இதே காலகட்டத்துடன் ஒப்பிடுகையில், நடப்பு பருவத்தில் இரபி பயிர்களின் சாகுபடி பரப்பு இதுவரை 24.13 இலட்சம் ஹெக்டேர் உயர்ந்துள்ளது.

---

**1. 'உலக அறிவுசார் சொத்து குறிகாட்டிகள்' என்பது கீழ்க்காணும் எந்த நிறுவனத்தால் வெளியிடப்படும் ஓர் அறிக்கை ஆகும்?**

அ. உலக பொருளாதார மன்றம்

ஆ. ஆசிய வளர்ச்சி வங்கி

இ. NITI ஆயோக்

**ஈ. உலக அறிவுசார் சொத்து அமைப்பு (WIPO) ☑**

✓ ஜெனீவாவைச்சார்ந்த உலக அறிவுசார் சொத்து அமைப்பானது (WIPO) உலக அறிவுசார் சொத்து குறிகாட்டிகள் என்ற அறிக்கையை வெளியிட்டது. இவ்வறிக்கையின்படி, கடந்த 2021ஆம் ஆண்டில் காப்புரிமைகள், வர்த்தக முத்திரைகள் மற்றும் வடிவமைப்புகளின் உலகளாவிய அறிவுசார் சொத்துரிமைகளின் தாக்கல்கள் சாதனை அளவை எட்டியது. இந்தியா, சீனா மற்றும் தென்கொரியா ஆகிய ஆசிய நாடுகளிலிருந்து அதிக தாக்கல்கள் பெறப்பட்டுள்ளன.

**2. 'சர்வதேச தினை ஆண்டு' என்று அறிவிக்கப்பட்ட ஆண்டு எது?**

அ. 2021

ஆ. 2022

**இ. 2023 ☑**

ஈ. 2025

✓ நடுவண் வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ் ஜெய்சங்கர் 2023ஆம் ஆண்டை சர்வதேச தினை ஆண்டாக அறிவிக்கும் கொண்டாட்ட நிகழ்வில் கலந்துகொண்டார். கடந்த 2018ஆம் ஆண்டில், 2023ஆம் ஆண்டை சர்வதேச தினை ஆண்டாக அறிவிக்க ஐக்கிய நாடுகள் சபைக்கு இந்தியா முன்மொழிந்தது. இந்த முன்மொழிவை கடந்த 2018ஆம் ஆண்டில் உணவு மற்றும் உழவு அமைப்பு (FAO) அங்கீகரித்தது.

**3. GST சட்டத்தின்படி, GST தொடர்பான வருவாய் இழப்புக்கு மாநிலங்களுக்கு எத்தனை ஆண்டுகள் வரை இழப்பீடு வழங்கப்படும்?**

அ. மூன்று

**ஆ. ஐந்து ☑**

இ. ஏழு

ஈ. பத்து

✓ 2017 ஜூலை.01 முதல் இந்தியாவில் சரக்கு மற்றும் சேவை வரி அறிமுகப்படுத்தப்பட்டது. GST (மாநிலங்களுக்கான இழப்பீடு) சட்டம், 2017இன் விதிகளின்படி, GSTஐ அமல்படுத்துவதால் ஏற்படும் வருவாய் இழப்புக்கு மாநிலங்களுக்கு ஐந்தாண்டு காலத்திற்கு இழப்பீடு வழங்கப்படும். 2022 ஏப்ரல்–ஜூன் காலகட்டத்திற்கான சரக்கு மற்றும் சேவை வரிக்கான (GST) இருப்பு இழப்பீடாக மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு நடுவண் அரசு அண்மையில் ₹17,000 கோடியை வழங்கியுள்ளது.

**4. ISROஆல் PSLV-C54 ஏவுகலம்கொண்டு ஏவப்பட்ட செயற்கைக்கோள் எது?**

**அ. OceanSat-3 ☑**

ஆ. ICRISat-3

இ. AstroSat-3

ஈ. RISAT-3



✓ புவி கண்காணிப்பு செயற்கைக்கோள்–6 எனப்படும் ஓசன்சாட்–3 மற்றும் 8 நானோ செயற்கைக்கோள்களை சுமந்து கொண்டு இந்திய விண்வெளி ஆய்வு மையத்தின் (ISRO) PSLV–C54 விண்கலம் வெற்றிகரமாக விண்ணில் பறந்தது. ஆந்திர பிரதேச மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி மையத்தில் இருந்து இந்தச் செயற்கைக்கோள் ஏவப்பட்டது. எட்டு நானோ செயற்கைக்கோள்களில் பூட்டானுக்கான ISRO நானோ செயற்கைக் கோள்–2 (INS–2B), ஆனந்த், ஆஸ்ட்ரோகாஸ்ட் (நான்கு செயற்கைக்கோள்கள்) மற்றும் 2 தைபோல்ட் செயற்கைக் கோள்கள் அடங்கும்.

**5. காசநோய் முக்த் பாரத் பரப்புரையின் தேசிய தூதராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?**

அ. விராத் கோலி

ஆ. தீபிகா படுகோனே

**இ. தீபா மாலிக் ☑**

ஈ. P V சிந்து



✓ 'பத்மஸ்ரீ', 'கேல் இரத்னா' மற்றும் 'அர்ஜுனா விருது' பெற்ற தீபா மாலிக் நி–க்ஷய் மித்ரா மற்றும் காசநோய் முக்த் பாரத் பரப்புரை திட்டத்தின் தேசிய தூதராக நியமிக்கப்பட்டுள்ளார். தீபா மாலிக், பாராலிம்பிக்கில் பதக்கம் வென்ற முதல் இந்தியப் பெண்மணி ஆவார். மேலும், இந்தியாவின் பாராலிம்பிக் குழுமத்தின் தலைவராகவும் அவர் உள்ளார். நி–க்ஷய் மித்ரா என்பது இந்தியக் குடியரசுத்தலைவர் திரௌபதி முர்முவால் தொடங்கப்பட்ட ஒரு முனைவாகும். அது காசநோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு ஊட்டச்சத்து, கூடுதல் நோயறிதல் மற்றும் தொழிற்சார் ஆதரவின் மூன்று நிலைகளில் உதவி வழங்க முற்படுகிறது.

**6. இந்தியாவின் ஐம்பதாவது தலைமை நீதியரசராக பதவியேற்றவர் யார்?**

**அ. நீதியரசர் D Y சந்திரசூட் ☑**

ஆ. நீதியரசர் U U லலித்

இ. நீதியரசர் இரஞ்சன் கோகாய்

ஈ. நீதியரசர் சஞ்சை கிஷன் கௌ



✓ இந்தியாவின் ஐம்பதாவது தலைமை நீதியரசராக D Y சந்திரசூட் பொறுப்பேற்றார். சமீபத்தில் முன்னாள் தலைமை நீதியரசர் UU லலித் அவர்களால் நீதியரசர் D Y சந்திரசூட் இப்பதவிக்கு பரிந்துரைக்கப்பட்டார். உச்சநீதிமன்றத்தின் மிக மூத்த நீதிபதியான நீதியரசர் D Y சந்திரசூட், 74 நாட்கள் மட்டுமே பதவியிலிருந்த உதய் உமேஷ் லலித்துக்குப் பிறகு, ஈராண்டுகளுக்கு தலைமை நீதியரசாராக பணியாற்றவுள்ளார். நீதியரசர் D Y சந்திரசூட் 2024 நவம்பர் மாதம் வரை தலைமை நீதியரசராக பொறுப்பு வகிப்பார்.

**7. இந்தியாவில், 'தேசிய சட்ட சேவைகள் நாள்' அனுசரிக்கப்படுகிற தேதி எது?**

அ. நவம்பர்.03

ஆ. நவம்பர்.05

**இ. நவம்பர்.09 ☑**

ஈ. நவம்பர்.11




✓ தேசிய சட்ட சேவைகள் நாளானது ஆண்டுதோறும் நவம்பர்.09 அன்று நாடு முழுவதும் அனுசரிக்கப்படுகிறது. சட்ட சேவைகள் அதிகாரசபை சட்டம் இயற்றப்பட்டதை நினைவுகூருவதும், சட்டம் தொடர்பான விதிகள்குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதும் இந்த நாளின் நோக்கமாகும். இந்தியாவில் ஒரே மாதிரியான முறையில், "சட்ட உதவி திட்டங்களுக்கு சட்டப்பூர்வ தளத்தை" வழங்குவதற்காக 1987ஆம் ஆண்டு சட்ட சேவைகள் அதிகாரசபை சட்டம் இயற்றப்பட்டது. இந்தச் சட்டம் 1995 நவ.9இல் நடைமுறைக்கு வந்தது. இந்தச் சட்டத்தின் நோக்கம், நாட்டில் ஒடுக்கப்பட்ட சமூக–பொருளாதார சமூகங்களைச் சேர்ந்த மக்களுக்கு தகுதியான மற்றும் இலவச சட்ட உதவிகளை வழங்குவதாகும்.

**8. 2023ஆம் ஆண்டில், IBA மகளிர் உலக குத்துச்சண்டை சாம்பியன்ஷிப்பை நடத்தவுள்ள ஆசிய நாடு எது?**

அ. இலங்கை

ஆ. பாகிஸ்தான்

இ. நேபாளம்

**ஈ. இந்தியா ☑**



✓ 2023 – IBA மகளிர் உலக குத்துச்சண்டை சாம்பியன்ஷிப்பை நடத்தும் நாடாக இந்தியா அறிவிக்கப்பட்டுள்ளது. சர்வதேச குத்துச்சண்டை சங்கம் (IBA) மற்றும் இந்திய குத்துச்சண்டை கூட்டமைப்பு (BFI) இடையே இந்த நிகழ்வு தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. இது இந்தியாவில் நடத்தப்படும் மூன்றாவது மகளிர் உலக சாம்பியன்ஷிப்பும் ஆறு ஆண்டுகளுக்குள் நடத்தப்படும் இரண்டாவது போட்டியுமாகும்.

**9. 2022 நவம்பர் நிலவரப்படி, காலநிலைக்கான சதுப்புநிலக்காடுகள் கூட்டணியில் உள்ள நாடுகள் எத்தனை?**

அ. மூன்று

**ஆ. ஐந்து ☑**

இ. ஏழு

ஈ. ஒன்பது




✓ எகிப்தில் உள்ள ஷர்ம் எல்–ஷேக்கில் நடந்த COP27 அமர்வில், காலநிலைக்கான சதுப்புநிலக்காடுகள் கூட்டணியில் இணைந்த முதல் ஐந்து நாடுகளில் இந்தியாவும் ஒன்றாகும். இந்தக் கூட்டணியில் இணைந்த பிற நாடுகள்: ஆஸ்திரேலியா, ஜப்பான், ஸ்பெயின் மற்றும் இலங்கை. இந்த நடவடிக்கையானது 2.5–3 பில்லியன் டன் கரியமில வாயு உமிழ்வினைக் ($CO_2$) கட்டுப்படுத்தும் இந்தியாவின் தேசிய அளவில் தீர்மானிக்கப்பட்ட பங்களிப்புகளுக்கு இணங்கும் வகையில் உள்ளது.

**10. 'சர்வதேச வறட்சியை எதிர்க்கும் கூட்டணி (IDRA)' தொடங்கப்பட்ட ஆண்டு எது?**

**அ. 2022 ☑**

ஆ. 2010

இ. 2015

ஈ. 2020

✓ ஸ்பெயின் மற்றும் செனகல் தலைமையில் முப்பது நாடுகள் மற்றும் இருபது உலகளாவிய நிறுவனங்கள், 'சர்வதேச வறட்சியை எதிர்க்கும் கூட்டணியை (International Drought Resilience Alliance–IDRA)' தொடங்கியுள்ளன. இது ஷர்ம் எல்–ஷேக்கில் நடந்த ஐக்கிய நாடுகளின் காலநிலை மாற்றத்திற்கான மாநாட்டின் (UNFCC) COP27 மாநாட்டில் தொடங்கப்பட்டது. காலநிலை மாற்றத்தின் தாக்கங்களுக்கு ஐக்கிய நாடுகள் அவையின் ஒரு குறிப்பிட்ட தீர்வாக இக்கூட்டணி கருதப்படுகிறது; ஏனெனில், இது எதிர்காலத்தில் நிகழப்போகின்ற வறட்சிகளுக்கு ஒருவருக்கொருவர் சிறப்பாக தயாராக இருப்பதற்கு உதவும்.

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. மலேசியாவில் தொடங்கியது இந்திய– மலேசிய கூட்டு இராணுவப் பயிற்சி**

"ஹரிமாவு சக்தி–2022" என்ற இந்திய– மலேசிய கூட்டு இராணுவப்பயிற்சி மலேசியாவின் குலுவாங்கில் உள்ள புலாயில் தொடங்கியது. இந்தப் பயிற்சி டிசம்பர்.12–ஆம் தேதி நிறைவடையும். "ஹரிமாவு சக்தி" என்பது 2012 முதல் இந்திய மற்றும் மலேசிய இராணுவங்களுக்கு இடையே ஆண்டுதோறும் நடைபெறும் கூட்டுப்பயிற்சியாகும்.

இந்திய ராணுவத்தின் கர்வால் ரைபிள்ஸ் படையும், மலேசிய இராணுவத்தின் ராயல் மலாய் படையும் இந்தக் கூட்டு பயிற்சியில் கலந்துகொண்டு, வனப்பகுதிகளில் பல்வேறு இராணுவ நடவடிக்கைகளைத் திட்டமிட்டு செயல்படுத்தும் முறையை மேம்படுத்துவதற்கான அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ளவிருக்கின்றன. உத்திசார்ந்த திறன்கள் மற்றும் படைகளுக்கு இடையேயான இயங்குதன்மையை மேம்படுத்துவது, இராணுவங்களுக்கு இடையேயான உறவை ஊக்குவிப்பது முதலியவற்றில் சிறப்பு கவனம் செலுத்தும் வகையில் இரண்டு நாள் நிறைவு நிகழ்ச்சியும் நடைபெறவுள்ளது. இந்திய மற்றும் மலேசிய இராணுவங்களுக்கு இடையேயான பாதுகாப்பு ஒத்துழைப்பை மேம்படுத்தும் இந்தக் கூட்டுப்பயிற்சியால், இருநாடுகளின் உறவும் அடுத்த நிலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

---

**2. சிறந்த கைவினைக் கலைஞர்களுக்கு சில்ப் குரு மற்றும் தேசிய விருதுகள் வழங்கப்பட்டன**

2017, 2018, 2019 ஆகிய மூன்று ஆண்டுகளுக்கான 'சில்ப் குரு' மற்றும் தேசிய விருதுகள் வழங்கப்பட்டன. 30 பேருக்கு 'சில்ப் குரு' விருதுகளும். 78 பேருக்கு தேசிய விருகளும் வழங்கப்பட்டன. கைவினைஞர்களின் சிறப்பான செயல்திறன், இந்திய கைவினைப்பொருட்கள் மற்றும் ஜவுளித்துறையில் மதிப்புமிக்க பங்களிப்புக்காக இந்த விருதுகள் வழங்கப்படுகின்றன. 'சில்ப் குரு' விருதுகள் மிகச்சிறந்த கைவினை கலைஞர்களுக்கு வழங்கப்படுகிறது. 2002–ஆம் ஆண்டு, இந்திய கைவினைத் தொழில்கள் பொன்விழாவையொட்டி இந்த விருது நிறுவப்பட்டது.

'சில்ப் குரு' விருதில் தங்க நாணயம் ஒன்று ₹2 லட்சம் ரொக்கப்பரிசு, தாமிரப்பத்திரம், சால்வை, சான்றிதழ் ஆகியவை அடங்கும். தேசிய விருதுகள் கடந்த 1965ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகின்றன. இதில் ரொக்கப்பரிசு ₹1 இலட்சம், தாமிரப்பத்திரம், சால்வை மற்றும் சான்றிதழ் அடங்கும். தமிழ்நாட்டைச் சேர்ந்த தஞ்சாவூர் ஓவியக்கலைஞர் வி பன்னீர்செல்வம், 2019ஆம் ஆண்டுக்கான 'சில்ப் குரு' விருதைப் பெற்றுள்ளார். புதுச்சேரியைச் சேர்ந்த கே வெங்கடேசன், டெரக்கோட்டா வேலைப்பாட்டுக்காகவும், மாசிலாமணி, ஷோலாபித் வேலைப்பாட்டுக்காகவும், தேசிய விருதுகளுக்காக தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் இருவரும் 2019ஆம் ஆண்டுக்கான விருதுகளைப் பெற்றுள்ளனர்.

---

**3. குடியரசு நாள் விழா தலைமை விருந்தினர் எகிப்து அதிபர் எல்–சிசி: வெளியுறவு அமைச்சகம்**

தில்லியில் வரும் ஜன.26இல் நடைபெறவுள்ள குடியரசு நாள் விழாவில் தலைமை விருந்தினராக எகிப்து அதிபர் அப்தல் பதா எல்–சிசி பங்கேற்கவிருப்பதாக வெளியுறவு அமைச்சகம் தெரிவித்தது. இந்திய குடியரசு நாள் விழாவில் தலைமை விருந்தினராக எகிப்து நாட்டின் அதிபர் பங்கேற்கவிருப்பது இதுவே முதல்முறை என்று அந்த அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

குடியரசு நாளையொட்டி, தேசத்தின் ராணுவ வல்லமையையும் பல்வேறு மாநிலங்களின் கலாசார பெருமையையும் பறைசாற்றும் வகையில் தில்லியில் பிரம்மாண்ட அணிவகுப்பு நடைபெறும். இதில் தலைமை விருந்தினராக நட்பு நாடுகளின் தலைவர்கள் பங்கேற்று சிறப்பிப்பது வழக்கம். 1950 முதலே இந்த வழக்கம் தொடர்ந்து வருகிறது. 1952, 1953, 1966 ஆகிய ஆண்டுகளில் வெளிநாட்டுத் தலைவர்கள் பங்கேற்பின்றி குடியரசு நாள் விழா நடைபெற்றது. கடந்த 2021இல் அப்போதைய பிரிட்டன் பிரதமர் போரிஸ் ஜான்ஸனுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தபோதிலும் கரோனா பரவல் அதிகரிப்பு காரணமாக அவரது இந்திய பயணம் இரத்து செய்யப்பட்டது. 2022இல் 5 மத்திய ஆசிய நாடுகளின் தலைவர்கள் அழைக்கப்பட்டிருந்தனர். ஆனால், COVID சூழல் காரணமாக அவர்கள் பங்கேற்கவில்லை. 2020இல் பிரேஸில் அதிபர் ஜெயிர் பொல்சனாரோ தலைமை விருந்தினராகப் பங்கேற்றிருந்தார். 2016இல் அப்போதைய பிரான்ஸ் அதிபர் பிரான்சுவா ஹொலாந்த், 2015இல் அப்போதைய அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா, 2007இல் ரஷிய அதிபர் விளாதிமீர் புதின் தலைமை விருந்தினர்களாகப் பங்கேற்றிருந்தனர்.

**4. பள்ளி மாணவர்களின் அறிவியல் மனப்பான்மையை மேம்படுத்தும் 'ஸ்டெம் ஆன் வீல்ஸ்' (வானவில் மன்றம்)**

திருச்சி காட்டூர் அரசு ஆதிதிராவிடர் நல மேல்நிலைப்பள்ளியில் நடந்த அரசு விழாவில் பள்ளி மாணாக்கர்களுக்காக வானவில் மன்றம் என்ற புதிய திட்டத்தை (எங்கும் அறிவியல்–யாவும் கணிதம்) முதலமைச்சர் மு க ஸ்டாலின் தொடங்கி வைத்தார். இதையடுத்து 38 மாவட்டங்களில் 13,210 அரசுப்பள்ளிகளில் 6 முதல் 8ஆம் வகுப்பு மாணவர்களுக்கு வானவில் மன்றம் தொடங்கிவைக்கப்பட்டது. இதன்மூலம் 25 இலட்சம் மாணவ, மாணவிகள் பயனடைவார்கள். இந்தத்திட்டத்திற்காக தமிழ்நாடு அரசு ₹25 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

பள்ளிக்கல்வித்துறையின்கீழ் செயல்படும் அரசுப்பள்ளிகளில் ஆறாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவிகளிடையே அறிவியல் மற்றும் கணித கருத்துகள் குறித்த சிந்திக்கும் திறமையுடன் கூடிய ஆர்வத்தை வளர்த்தெடுப்பதற்கான சூழலை உருவாக்குவதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும். இந்தத்திட்டத்திற்கு 'ஸ்டெம் திட்டம்' எனப் பெயரிடப்பட்டுள்ளது. அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல், கணிதம் ஆகிய நான்கு பாடங்களில் முதல் எழுத்தை இணைத்து 'STEM' என உருவகப்படுத்தி உள்ளனர். அரசுப்பள்ளிகளில் முதல் முறையாக மேற்கொள்ளப்படும் ஒரு புதுமையான முயற்சி என்பது குறிப்பிடத்தக்கது.

**1. CITES COP19 ஆனது அண்மையில் எந்த விலங்கின் நிலை தரமிறக்கும் திட்டத்தை ஏற்றுக்கொண்டது?**



அ. இமயமலை காட்டெருமை


ஆ. இந்திய மெல்லோட்டு ஆமை

**இ. தெற்கத்திய வெண் காண்டாமிருகங்கள் ☑**

ஈ. கானமயில்

✓ CITES COP19 ஆனது அண்மையில் தெற்கத்திய வெண் காண்டாமிருகங்களின் நிலையை பின்னிணைப்பு–Iஇலிருந்து பின்னிணைப்பு–IIக்கு தரமதிப்புக்குறைக்கும் திட்டத்தை ஏற்றுக்கொண்டது. போட்ஸ்வானா மற்றும் நமீபியாவின் கோரிக்கையை ஏற்று COP19 இதனை ஆதரித்தது. பின்னிணைப்பு–Iஇல் பட்டியலிடப்பட்டுள்ள காட்டு விலங்கினங்கள், 'அழிவின் விளிம்பில்' உள்ளவையாகும்.

**2. தங்கமயில் விருதை வென்ற, 'I have Electric Dreams' என்பது எந்த மொழியில் தயாரிக்கப்பட்ட திரைப்படமாகும்?**




அ. ஆங்கிலம்


ஆ. சீனம்

**இ. ஸ்பானியம் ☑**

ஈ. ஜெர்மானியம்

✓ இந்திய சர்வதேச திரைப்பட விழாவின் (IFFI) 53ஆவது பதிப்பு அண்மையில் நிறைவடைந்தது. வாலண்டினா மாரல் இயக்கிய ஸ்பானிய திரைப்படமான, 'ஐ ஹேவ் எலக்ட்ரிக் டிரீம்ஸ்' 'தங்கமயில்' விருதை வென்றது. நோ எண்ட் படத்தின் நடிகரான வஹித் மொபசேரி சிறந்த நடிகருக்கான (ஆண்) 'வெள்ளிமயில்' விருதும், ஐ ஹேவ் எலக்ட்ரிக் டிரீம்ஸ் திரைப்படத்தின் முன்னணி நடிகையான டேனிலா மரின் நவரோ சிறந்த நடிகருக்கான (பெண்) 'வெள்ளி மயில்' விருதும் பெற்றார். ஈரானிய எழுத்தாளரும் இயக்குநருமான நாடர் சேய்வர் சிறந்த இயக்குநருக்கான 'வெள்ளி மயில்' விருதை நோ எண்ட் திரைப்படத்திற்காக பெற்றார். பிரான்ஸ், இந்த ஆண்டுக்கான, 'சிறப்புக்கவனம்' பெற்ற நாடாக இருந்தது.

**3. சாத்தியம்மிகு லித்தியம் இருப்புக்களை மதிப்பிடுவதற்காக, இந்தியா, கீழ்க்காணும் எந்நாட்டிற்கு குழுவொன்றை அனுப்பியுள்ளது?**




அ. ஆஸ்திரேலியா

ஆ. பிரேஸில்

**இ. அர்ஜென்டினா ☑**

ஈ. எகிப்து

✓ அர்ஜென்டினாவில் சாத்தியம் நிறைந்த லித்தியம் படிவுகள் மற்றும் சாத்தியம்மிகு கையகப்படுத்தல் வாய்ப்புகளை மதிப்பிடுவதற்காக இந்தியா மூன்று புவியியலாளர்கள் குழுவை அர்ஜென்டினாவிற்கு அனுப்பியுள்ளது. மினரல் எக்ஸ்ப்ளோரேஷன் கார்ப்பரேஷன் லிட் (MECL), KABIL (கனிஜ் பிதேஷ் இந்தியா லிட்) மற்றும் இந்திய புவியியல் ஆய்வு (GSI) ஆகியவற்றிலிருந்து தலா ஒரு புவியியலாளர் இக்குழுவில் உள்ளனர். இந்தியாவில் லித்தியம் சார்ந்த எந்தவொரு வளமும் இல்லாத காரணத்தினால் அந்தக்கனிமம் முதன்மையாக இறக்குமதி செய்யப்படுகிறது. மின்–வாகனங்களில் பயன்படுத்தப்படும் மறுவூட்டம் செய்யக்கூடிய மின்கலங்களில் லித்தியம் முக்கிய அங்கமாக பயன்படுத்தப்படுகிறது.

**4. கீழ்க்காணும் எந்த நாட்டின் அதிபர், இந்தியக் குடியரசு நாள் கொண்டாட்டங்களில் சிறப்பு விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார்?**



அ. ஐக்கிய அரபு அமீரகம்

**ஆ. எகிப்து ☑**

இ. ஆஸ்திரேலியா

ஈ. ஜப்பான்

✓ 2023ஆம் ஆண்டு குடியரசு நாளில் முதன்மை விருந்தினராக எகிப்து அதிபர் அப்தெல் பத்தா அல்–சிசியை இந்தியா அழைத்துள்ளதாக வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது. இந்தியக் குடியரசு நாள் விழாவில் எகிப்து அதிபர் ஒருவர் சிறப்பு விருந்தினராக கலந்துகொள்வது இதுவே முதல்முறையாகும். இந்தியாவின் தலைமையின்கீழ் G20 உச்சிமாநாட்டிற்கு வருகைதரும் ஒன்பது நாடுகளில் எகிப்தும் ஒன்றாகும். இருநாடுகளும் இந்த ஆண்டில் தங்களது தூதரக உறவுகளின் 75ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடுகின்றன.

**5. கீழ்க்காணும் எந்த நகரத்தின் அருங்காட்சியக மறுசீரமைப்புத் திட்டத்திற்கு UNESCOஇல், 'சிறப்புத்துவத்திற்கான விருது' வழங்கப்பட்டுள்ளது?**

அ. பெங்களூரு

**ஆ. மும்பை ☑**

இ. கொச்சின்

ஈ. பனாஜி

✓ மும்பையைச் சார்ந்த சத்திரபதி சிவாஜி மகாராஜா வாஸ்து சங்கராலயாவுக்கு ஐக்கிய நாடுகளின் கல்வி, அறிவியல் மற்றும் கலாச்சார அமைப்பின் (UNESCO) 'ஆசிய–பசிபிக் கலாச்சார பாரம்பரியப் பாதுகாப்புக்கான விருதுகள்–2022'இல் 'சிறப்புத்துவத்திற்கான விருது' வழங்கப்பட்டது. ஹைதராபாத்தில் உள்ள கோல்கொண்டாவைச் சேர்ந்த ஸ்டெப்வெல்ஸுக்கு 'தனிச்சிறப்பு' விருதும், டோமகொண்டா கோட்டை, தெலுங்கானா மற்றும் பைகுல்லா நிலையம், மும்பைக்கு 'சிறப்பு மதிப்பு' விருதும் வழங்கப்பட்டது.

**6. 'SVAMITVA' திட்டத்தைச் செயல்படுத்துகிற நடுவண் அமைச்சகம் எது?**

அ. உழவு மற்றும் உழவர்கள் நல அமைச்சகம்

**ஆ. பஞ்சாயத்து இராஜ் அமைச்சகம் ☑**

இ. ஊரக வளர்ச்சி அமைச்சகம்

ஈ. அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகம்

✓ பஞ்சாயத்து இராஜ் அமைச்சகம், 'SVAMITVA' என்ற சொத்துக்கணக்கெடுப்பு திட்டத்தைச் செயல்படுத்துகிறது. மத்திய பிரதேச மாநிலம் போபாலில் நடந்த, 'SVAMITVA' திட்டம் மற்றும் கிராமப்புற திட்டமிடல் குறித்த தேசிய மாநாட்டின் போது, 'SVAMITVA' திட்டம்குறித்த நிபுணர் குழுவின் அறிக்கை வெளியிடப்பட்டது. 'SVAMITVA' என்ற திட்டத்தின் நோக்கங்களை முழுமையாய் உணர்வதற்காக மாநிலங்கள் பின்பற்றக்கூடிய வழிகாட்டும் கொள்கைகளை இது வழங்குகிறது. இந்திய அரசின் முன்னாள் செயலாளர் பி கே அகர்வால் தலைமையில் 2022 பிப்ரவரியில் இதற்கான நிபுணர் குழு உருவாக்கப்பட்டது.

**7. திடீரென தட்டம்மை நோய் பரவியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ள மெட்ரோ நகரம் எது?**



அ. சென்னை **ஆ. மும்பை ☑**

இ. புது தில்லி ஈ. கொல்கத்தா

✓ மும்பையில் நிலவும் தட்டம்மை நோய் பரவலைக் கட்டுப்படுத்தவும், அதை மதிப்பிடவுமாக ஓர் உயர்மட்ட பல்துறைக் குழுவை நடுவணரசு மும்பைக்கு அனுப்பியுள்ளது. மும்பையின் குடிமை அமைப்பான பிரகன்மும்பை முனிசிபல் கார்ப்பரேஷன் ஆனது கோவந்தியில் 15 ஐயத்திற்கிடமான தட்டம்மை பாதிப்புகளைக் கண்டறிந்துள்ளது. தட்டம்மை என்பது வைரஸால் ஏற்படும் ஒரு தொற்றுநோயாகும்; இது சுவாசக்குழாயைப் பாதித்து பின்னர் உடல் முழுவதும் பரவும் நோயாக மாறுகிறது.

### 8. 2022 – அமைதி மற்றும் வளர்ச்சிக்கான உலக அறிவியல் நாளுக்கானக் கருப்பொருள் என்ன?




**அ. Basic Sciences for Sustainable Development ☑**

ஆ. Growth and World Peace

இ. Science and Society

ஈ. Learning and Teaching

✓ அமைதி மற்றும் வளர்ச்சிக்கான உலக அறிவியல் நாளானது ஆண்டுதோறும் நவ.10 அன்று அனுசரிக்கப்படுகிறது. சமூகத்திற்கும் நமது அன்றாட வாழ்விற்கும் அறிவியல் எவ்வளவு முக்கியம் என்பது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இந்த நாளின் நோக்கமாகும். "Basic Sciences for Sustainable Development" என்பது இந்த ஆண்டு (2022) அமைதி மற்றும் வளர்ச்சிக்கான உலக அறிவியல் நாளுக்கானக் கருப்பொருளாகும்.

### 9. 2023–24இல், 'கேலோ இந்தியா தேசிய பல்கலைக்கழக விளையாட்டுகளை' நடத்தும் மாநிலம் எது?

அ. கர்நாடகா

ஆ. ஒடிஸா

**இ. உத்தர பிரதேசம் ☑**

ஈ. மேற்கு வங்காளம்

KHELO INDIA

✓ உத்தர பிரதேச மாநிலத்தின் லக்னௌ, கோரக்பூர், வாரணாசி மற்றும் நொய்டா ஆகிய 4 நகரங்களில் 2023–24இல் கேலோ இந்தியா தேசிய பல்கலைக்கழக விளையாட்டுகள் நடத்தப்படவுள்ளன. ஒடிஸா மற்றும் கர்நாடகாவுக்குப் பிறகு, உத்தர பிரதேசம் முதல்முறையாக தேசிய பல்கலைக்கழக விளையாட்டுப் போட்டிகளை நடத்துகிறது. தேசிய பல்கலைக்கழக விளையாட்டுப் போட்டிகளில் 26 வயதுக்குட்பட்ட விளையாட்டு வீரர்கள் பங்கேற்பார்கள். 12 முன்னாள் விளையாட்டு வீரர்களை பயிற்சியாளர்களாக அரசு நியமித்துள்ளது.

### 10. அண்மையில், 2ஆவது BIMSTEC வேளாண்துறை அமைச்சர்கள் கூட்டத்தை நடத்திய நாடு எது?




அ. இலங்கை

**ஆ. இந்தியா ☑**

இ. மாலத்தீவுகள்

ஈ. தைவான்

✓ நடுவண் வேளாண்துறை அமைச்சர் நரேந்திர சிங் தோமர் தலைமையில் பல்வேறு துறைசார்ந்த தொழில்நுட்பம் மற்றும் பொருளாதார ஒத்துழைப்புக்கான வங்காள விரிகுடா முன்னெடுப்பின் வேளாண்துறை அமைச்சர்கள் நிலையிலான இரண்டாவது கூட்டத்தை இந்தியா நடத்தியது. இந்தக் கூட்டத்தில் பூடான், வங்காளதேசம், நேபாளம், மியான்மர், இலங்கை மற்றும் தாய்லாந்து நாடுகளின் வேளாண்துறை அமைச்சர்கள் பங்கேற்றனர்.

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. இந்திய ஒலிம்பிக் சங்கத் தலைவராகிறார் P T உஷா!**

இந்திய ஒலிம்பிக் சங்கத்தின் முதல் பெண் தலைவராக முன்னாள் தடகள வீராங்கனை P T உஷா (58) தேர்வாக உள்ளார். தலைவர் தேர்தலுக்கு P T உஷா மட்டுமே வேட்புமனுத் தாக்கல்செய்துள்ள நிலையில், போட்டியின்றி தலைவராகத் தேர்வாகவுள்ளார். இவர் இந்திய ஒலிம்பிக் சங்கத்தின் முதல் பெண் தலைவர் என்ற பெருமையை பெறவுள்ளார். ஆசிய விளையாட்டுப்போட்டிகளில் தங்கம், வெள்ளி உள்ளிட்ட பதக்கங்களை குவித்துள்ள P T உஷா, கடந்த 1984இல் நடந்த ஒலிம்பிக்கில் 400 மீ போட்டியில் 4ஆவது இடம்பெற்று இந்தியாவுக்குப் பெருமைசேர்த்தார்.

---

**2. 13,210 அரசுப்பள்ளிகளில் 'வானவில் மன்றம்'**

'எங்கும் அறிவியல்–யாவும் கணிதம்' என்பதை அடிப்படையாகக் கொண்டு தமிழ்நாட்டில் 13,210 அரசுப்பள்ளிகளில் 'வானவில் மன்றம்' திட்டத்தை முதலமைச்சர் மு க ஸ்டாலின், திருச்சியில் தொடக்கிவைத்தார்.

திருச்சி காட்டூர், பாப்பாக்குறிச்சி ஆதிதிராவிடர் நல பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற இந்த விழாவின் ஒருபகுதியாக, 100 நடமாடும் அறிவியல் ஆய்வகங்கள் மற்றும் இருசக்கர வாகனங்களில் பயிற்சியளிக்க செல்லும் தன்னார்வலர்களையும் முதலமைச்சர் கொடியசைத்து வழியனுப்பி வைத்தார்.

அரசுப்பள்ளிகளில் 6 வகுப்பு முதல் 8 வகுப்பு வரை பயிலும் மாணவர், மாணவிகளிடையே அறிவியல் மற்றும் கணிதம் குறித்த ஆர்வத்தை ஏற்படுத்துதல், மாணவர்களிடம் இயல்பாகவே உள்ள படைப்பாற்றல் ஆர்வத்தை வளர்த்தெடுத்தல், புதுமைகளைக் காணும் மனப்பாங்கை வளர்த்தெடுத்தல், தமக்கான மொழியில் அறிவியல் மொழி பழகுதல், அன்றாட வாழ்க்கையிலுள்ள அறிவியலை உணர்தல், சமூகவியல், இலக்கியத்துடனான அறிவியலைப் புரிந்துகொள்ளுதல் ஆகியவையே இந்தத் திட்டத்தின் நோக்கங்களாகும். இந்தத் திட்டத்திற்கு 710 கருத்தாளர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

710 கருத்தாளர்களுக்கும் இருசக்கர வாகனங்கள் வழங்கப்பட்டு நடமாடும் அறிவியல் மற்றும் கணித பரிசோதனை ஏதுவாளர்களாக செயல்படுவர். மாணவர்களுக்கு எளிய அறிவியல் பரிசோதனைகளுக்கான கருவிகளையும் உடன் எடுத்து வருவர். இவர்கள் பள்ளிதோறும் சென்று ஆசிரியர்கள் துணையோடு மாணவர்களுக்கு அறிவியல் பரிசோத–னைகளை செய்து காட்டுவர். அறிவியல் மற்றும் கணித வல்லுநர்களுடன் இணையவழி கலந்துரையாடலுக்கும் ஏற்பாடுகள் செய்யப்படும். இதன்மூலம் சக ஆசிரியர்களுடனான துறைசார்ந்த உரையாடலுக்கு வாய்ப்பு ஏற்படும்.

நவீன தொழிநுட்பங்களையும் கணிதம் சார்ந்த புதிய உத்திகளையும் அறிந்துகொள்வதுடன் அவற்றை வகுப்புகளில் மாணவர்களிடத்தில் பகிர்ந்துகொள்ளவும் இந்தக் கலந்துரையாடல் உதவும். இந்தத் திட்டமானது மாநிலம் முழுவதும் திங்கள்கிழமை முதல் பயன்பாட்டுக்கு வந்தது. இந்தத்திட்டத்துக்காக ₹25 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 25 இலட்சம் மாணவர், மாணவிகள் பயன்பெறுகின்றனர்.

---

**3. 75% இந்தியர்களுக்கு கட்டுப்பாடற்ற இரத்த அழுத்தம்**

இந்தியாவில் 75 சதவீதத்துக்கும் அதிகமானோருக்குக் கட்டுப்பாடற்ற அளவில் இரத்தவழுத்தம் இருப்பதாக லான்செட் மருத்துவ இதழில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தியர்களின் இரத்த அழுத்தக் கட்டுப்பாடு தொடர்பாக கடந்த 2001ஆம் ஆண்டு முதல் வெளியான 51 ஆய்வறிக்கைகளை லான்செட் குழு ஆராய்ந்தது. அது தொடர்பான அறிக்கை லான்செட் பிராந்திய இதழில் வெளியிடப்பட்டுள்ளது. இரத்த அழுத்தத்தைக் கட்டுக்குள் வைத்திருப்பதில் பெண்கள் ஆண்களை விட சிறப்பாகச் செயல்படுவதாக 21 ஆய்வறிக்கைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது. கிராமப்பகுதிகளில் வசிக்கும் இந்தியர்கள் இரத்த அழுத்தத்தைக் கட்டுப்படுத்துவதில் முறையாகச் செயல்படுவதில்லை என ஆறு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ளதாக ஆய்விதழில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

**4. டிச.01இல் அறிமுகமாகிறது டிஜிட்டல் ரூபாய்!**

டிஜிட்டல் ரூபாய் வருகின்ற டிச.01 முதல் அறிமுகம் செய்யப்படவுள்ளதாக ரிசர்வ் வங்கி அறிவித்துள்ளது. 2022 மத்திய பட்ஜெட் கூட்டத்தொடரின்போது ரிசர்வ் வங்கிமூலம் டிஜிட்டல் ரூபாய் அறிமுகப்படுத்தப்படும் என்று நடுவண் நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் அறிவித்திருந்தார். இந்நிலையில், டிஜிட்டல் ரூபாய் வெளியீடு குறித்த அறிவிப்பை ரிசர்வ் வங்கி இன்று வெளியிட்டுள்ளது.

தற்போது புழக்கத்திலுள்ள நாணயங்களின் மதிப்பிலேயே டிஜிட்டல் ரூபாயும் சில்லறைப் பணப்பரிவர்த்தனைகளுக்–காக டிச.01ஆம் தேதி வெளியிடப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. டிஜிட்டல் முறையில் 'e₹–R' என்ற குறியீடு டிஜிட்டல் ரூபாய்க்கு வழங்கப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக SBI, ICICI, YES வங்கி, IDFC பர்ஸ்ட் ஆகிய நான்கு வங்கிகளில் அறிமுகமாகிறது. விரைவில் பரோடா வங்கி, யூனியன் பேங்க் ஆஃப் இந்தியா, HDFC வங்கி, கொடாக் மகேந்திரா வங்கியும் இணையவுள்ளன. மும்பை, தில்லி, பெங்களூரு, புவனேசுவரம் நகரங்களில் டிச.01ஆம் தேதியும், ஆமதாபாத், கௌகாத்தி, இந்தூர், லக்னௌ, பாட்னா, சிம்லாவில் விரைவில் அறிமுகமாகவுள்ளது. இதன்மூலம் நாளை மறுநாள் முதல் ₹1, ₹2, ₹5, ₹10, ₹20, ₹50, ₹100, ₹200, ₹500, ₹2000 மதிப்பிலான டிஜிட்டல் கரன்சிகள் புழக்கத்திற்கு வரவுள்ளன.

---

**5. குரங்கு அம்மைக்குப் புதிய பெயர்**

குரங்கம்மைக்கு 'M–அம்மை' என்று உலக சுகாதார அமைப்பு பெயரிட்டுள்ளது. தொடக்கத்தில் குரங்குகள் இடையே பரவிய அந்நோய், தற்போது மனிதர்களிடையே, அதிலும் ஆப்பிரிக்க நாடுகளில் அதிகமாகப்பரவும் நிலையில், குரங்கு அம்மை என்ற பெயர் கருப்பினத்தவர்களை இழிவுபடுத்தக் கூடும் என்பதால் புதிய பெயர் வைக்கப்பட்டுள்ளது.

---

**1. 'சமன்வை–2022' என்ற மனிதாபிமான உதவி மற்றும் பேரிடர் நிவாரணப்பயிற்சியை நடத்துகிற ஆயுதப்படை எது?**

அ. இந்திய இராணுவம்

ஆ. இந்திய கடற்படை

**இ. இந்திய வான்படை ☑**

ஈ. இந்திய கடலோர காவல்படை

✓ ஆக்ராவில் உள்ள வான்படை தளத்தில் மனிதாபிமான உதவி மற்றும் பேரிடர் நிவாரணத்திற்கு வருடாந்திர கூட்டுப் பயிற்சியான 'சமன்வை–2022' நவ.28–30 வரை நடைபெறவுள்ளது. இது நிறுவனம் சார்ந்த பேரிடர் மேலாண்மை கட்டடைமப்புகளின் திறன் மற்றும் அவசரகால நடவடிக்கைகள்பற்றி மதிப்பீடு செய்வதை நோக்கமாகக்கொண்டது. மேலும், பேரிடர் மேலாண்மைகுறித்த கருத்தரங்கும் வான்படை விமானங்களின் காட்சி விளக்கங்களும் இதில் இடம்பெறும். இந்தப் பயிற்சியின்போது ஆசியான் நாடுகளின் பிரதிநிதிகளும் பங்கேற்பார்கள்.

**2. 'நை சேத்னா' என்ற பரப்புரைத் திட்டத்தைத் தொடங்கிய நடுவண் அமைச்சகம் எது?**

**அ. ஊரக வளர்ச்சி அமைச்சகம் ☑**

ஆ. சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகம்

இ. பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம்

ஈ. MSME அமைச்சகம்

✓ நடுவண் ஊரக வளர்ச்சி அமைச்சகமானது 'நை சேத்னா' என்ற பெயரில் ஒருமாதகாலம் நீளும் பரப்புரைத் திட்டத்தை மக்கள் பங்கேற்பு இயக்கமாகத் தொடங்கியுள்ளது. குறிப்பாக கிராமப்புறங்களில் உள்ள பெண்களுக்கு அவர்களின் உரிமைகள் மற்றும் அவர்களின் குறைகளை நிவர்த்தி செய்ய உதவும் வழிமுறைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக நடுவண் ஊரக வளர்ச்சி அமைச்சகத்தால் இந்தத் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. 2022 நவ.25 அன்று பெண்களுக்கெதிரான வன்முறைகளை ஒழிப்பதற்கான சர்வதேச நாளின்போது இந்தத் திட்டம் தொடங்கப்பட்டது.

**3. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்புச்சட்டத்தை மறுசீரமைப்பதற்காக அமைக்கப்பட்ட குழுவின் தலைவர் யார்?**

**அ. அமர்ஜீத் சின்ஹா ☑**



ஆ. A K சிக்ரி

இ. இரஞ்சன் கோகோய்

ஈ. V V இரமணா

✓ மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்புச் சட்டத்தின் (MNREGA) கீழ் தேவைப்படும் கட்டமைப்பு & பிற சீர்திருத்தங்களை பரிந்துரைப்பதற்காக முன்னாள் ஊரக வளர்ச்சி செயலர் அமர்ஜீத் சின்ஹா தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது. மிகவும் தேவைப்படும் மாநிலங்களுக்கு அதிக வாய்ப்புகளை வழங்குவதன்மூலம் பிராந்திய ஏற்றத்தாழ்வைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளை இந்தக் குழு பரிந்துரைக்கவுள்ளது.

**4. 'மனநலம் மற்றும் சமூகப்பாதுகாப்புக் கொள்கையை' அறிமுகப்படுத்திய முதல் வடகிழக்கு மாநிலம் எது?**

அ. அஸ்ஸாம் **ஆ. மேகாலயா ☑**

இ. சிக்கிம் ஈ. மணிப்பூர்

- ✓ மேகாலயா மாநிலமானது வடகிழக்கில் முதல் மாநிலமாகவும், இந்தியாவில் மூன்றாவது மாநிலமாகவும், 'மனநலம் மற்றும் சமூகப்பாதுகாப்புக் கொள்கையை'க் கொண்டுள்ளது. ஒட்டுமொத்த மனநலம் & நலவாழ்வை மேம்படுத்துதல் மற்றும் பொருத்தமான அணுகல் மற்றும் பராமரிப்பு வழிகளை எளிதாக்குவது இந்தக் கொள்கையின் நோக்கமாகும். இந்தக் கொள்கையானது சரியான மனநலம் (குறிப்பாக குழந்தைகள், இளம்பருவத்தினர் மற்றும் இளையோர்) பேணப்படுவதில் கவனம் செலுத்துவதை உறுதி செய்யும் என்று மேகாலயா மாநில முதலமைச்சர் கான்ராட் K சங்மா தெரிவித்தார்.

**5. 'சர்வதேச போர்த்துகீசிய மொழி பேசுவோர் (லூசோபோன்) திருவிழா' நடத்தப்படும் மாநிலம் எது?**

அ. மகாராஷ்டிரா

**ஆ. கோவா ☑**

இ. குஜராத்

ஈ. அஸ்ஸாம்



- ✓ இந்திய கலாசார உறவுகள் கவுன்சில் மற்றும் கோவா மாநில அரசாங்கத்துடன் இணைந்து வெளியுறவு அமைச்சகம் 'சர்வதேச போர்த்துகீசிய மொழி பேசுவோர் (லூசோபோன்) திருவிழா'வை நடத்துகிறது. லூசோபோன்கள் என்பது போர்த்துகீசிய மொழியை பூர்வீகமாகவோ அல்லது இரண்டாம் மொழியாகவோ பேசும் மக்களைக் குறிக்கின்றது. இவ்விழாவின் ஒருபகுதியாக, லூசோபோன் இசை குறித்த பயிலரங்கங்கள், கோவா கட்டடக்கலை கண்காட்சிகள், கோவா கைவினைப்பொருட்கள் மற்றும் கோவா மரச்சாமான்கள், உணவு மற்றும் பானங்கள் திருவிழா ஆகியவை ஏற்பாடு செய்யப்படுகின்றன.

**6. அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட, '*Pseudohelice annamalai*' என்பது சார்ந்த இனம் எது?**

அ. ஆமை

ஆ. சிலந்தி

**இ. நண்டு ☑**

ஈ. வண்ணத்துப்பூச்சி



- ✓ வளம்நிறை தமிழ்நாட்டின் வெள்ளாற்றின் முகத்துவாரம் அருகேயுள்ள சதுப்புநிலத்தில் புதிய வகை 'கழிமுக நண்டு' இனத்தை ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் கல்வி & ஆராய்ச்சி சார்ந்த அதன் 100 ஆண்டுகால சேவையை அங்கீகரிப்பதற்காக இந்த இனத்திற்கு, '*Pseudohelice annamalai*' என்று பெயரிடப்பட்டுள்ளது. *Pseudohelice* என்ற இந்த இனம் முதல்முறையாக இங்குதான் கண்டறியப்பட்டுள்ளது. அதிக அலையிடைப் பகுதிகளிலிருந்து இது சேகரிக்கப்பட்டது. '*Pseudohelice annamalai*' இணமானது அடர் ஊதா நிறத்தில் இருந்து அடர் சாம்பல் நிறம் வரை வேறுபட்ட நிறங்களில் காணப்படுகிறது.

**7. 2022 – உலக பயன்மை (Usability) நாளுக்கானக் கருப்பொருள் என்ன?**

**அ. Our Health ☑**

ஆ. Make things easier

இ. Better Design

ஈ. Inclusivity

- ✓ ஒவ்வோர் ஆண்டும் நவம்பர் மாதத்தில் வரும் இரண்டாவது வியாழனன்று, உலகம் முழுவதும் உலக பயன்மை நாள் அனுசரிக்கப்படுகிறது. இந்த நாள், 'Make things easier' நாள் என்றும் அழைக்கப்படுகிறது. 'பயன்மை' என்பது ஒரு நபர் ஒரு பொருளை எவ்வளவு திறமையாகவும் பயனுள்ளதாகவும் பயன்படுத்த முடியும் என்பதை மதிப்பிடும் தரமாகும். 2022ஆம் ஆண்டில் வரும் உலக பயன்மை நாளுக்கானக் கருப்பொருள், "Our Health" என்பதாகும்.

**8. சுவிச்சர்லாந்து சுற்றுலாத்துறையால், 'நட்புத்தூதராக' நியமிக்கப்பட்டுள்ள இந்திய விளையாட்டு வீரர் யார்?**

அ. P V சிந்து

**ஆ. நீரஜ் சோப்ரா ☑**

இ. மேரி கோம்

ஈ. விராட் கோலி

✓ ஒலிம்பிக்கில் தங்கப்பதக்கம் வென்ற ஈட்டியெறிதல் வீரர் நீரஜ் சோப்ராவை, 'நட்புத்தூதராக' சுவிச்சர்லாந்து சுற்றுலாத் துறை நியமித்துள்ளது. ஒரு 'நட்புத்தூதராக' அவர் சுவிச்சர்லாந்தின் சாகசம் நிறைந்த சுற்றுலாத்தலங்களை இந்தியப் பயணிகளுக்கு காட்சிப்படுத்துவார் மற்றும் விளம்பரப்படுத்துவார்.

**9. 2022 – இந்திய வேளாண் வணிக விருதுகளில் 'சிறந்த மாநிலம்' பிரிவில் விருதுபெற்ற மாநிலம் எது?**

அ. கர்நாடகா

ஆ. ஒடிஸா

**இ. ஹரியானா ☑**

ஈ. மேற்கு வங்காளம்

✓ கொள்கைகள், திட்டங்கள், உற்பத்தி, உள்ளீடுகள், தொழில்நுட்பங்கள், சந்தைப்படுத்தல், மதிப்புக்கூட்டல், உட் கட்டமைப்பு மற்றும் வேளாண்துறையில் ஏற்றுமதி ஆகிய துறைகளில் பங்களித்ததற்காக ஹரியானாவுக்கு, 'சிறந்த மாநிலம்' என்ற பிரிவில் 2022 – இந்திய வேளாண் வணிக விருது வழங்கப்பட்டுள்ளது. மீன்வள அமைச்சகத்தின் கீழ் ஹைதராபாத்தில் உள்ள தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியத்திற்கு, 'சிறந்த வேளாண் வணிக' விருதுக்கான 2022 – இந்திய வேளாண் வணிக விருது வழங்கப்பட்டுள்ளது. இந்திய சர்வதேச வேளாண் வர்த்தகம் மற்றும் தொழில்நுட்ப கண்காட்சி – 2022 ஆனது இந்திய உணவு மற்றும் உழவு சம்மேளனத்தால் ஏற்பாடு செய்யப்பட்டது.

**10. 2022 – தேசிய கல்வி நாளுக்கானக் கருப்பொருள் என்ன?**

**அ. Changing Course, Transforming Education ☑**

ஆ. Education and Scientific Research

இ. Shaping Country's Education System

ஈ. Culture and Education




✓ இந்தியாவின் முதல் கல்வியமைச்சர் மௌலானா அபுல் கலாம் ஆசாத்தின் பிறந்தநாளை நினைவுகூரும் வகையில் kaடந்த 2008ஆம் ஆண்டு முதல் ஒவ்வோர் ஆண்டும் நவ.11ஆம் தேதி தேசிய கல்வி நாள் கொண்டாடப்படுகிறது. ஆசாத், நாட்டின் கல்வி முறையை வடிவமைப்பதில் குறிப்பிடத்தக்க பங்கைக் கொண்டிருந்தார் மற்றும் UGC, AICTE மற்றும் பல்வேறு கல்வி நிறுவனங்களை அமைப்பதில் பங்களித்தார். "Changing Course, Transforming Education" என்பது இந்த ஆண்டு (2022) தேசிய கல்வி நாளுக்கானக் கருப்பொருள் ஆகும்.

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. அருங்காட்சியகம் மற்றும் பூங்கா!**

அரியலூர் மாவட்டத்திலுள்ள கங்கைகொண்ட சோழபுரத்தில் அருங்காட்சியகமும், அரியலூர் மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களில் புதைபடிவப் பூங்காவும் அமைக்கப்படும் எனத் தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது. அரியலூர் மாவட்டத்தில் அகழ்வாராய்ச்சியின்போது கிடைக்கப்பெறும் புதைபடிவங்களை காட்சிப்படுத்துவதற்காக வாரணவாசி என்ற கிராமத்தில் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ளது.

---

**2. பெரம்பலூர் மாவட்டம் எறையூரில் சிப்காட் சார்பில் முதல் தொழிற்பூங்கா**

பெரம்பலூர் மாவட்டம் எறையூரில் அமைக்கப்பட்டுள்ள சிப்காட் தொழிற்பூங்காவை தமிழ்நாட்டு முதலமைச்சர் மு க ஸ்டாலின் திறந்து வைத்தார். மேலும், அங்கு அமையவுள்ள தனியார் காலணி பூங்காவுக்கு அடிக்கல் நாட்டினார். தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்துக்கும், கோத்தாரி பீனிக்ஸ் அக்கார்டு நிறுவனத்துக்கும் ₹1,700 கோடி மதிப்பில் இரண்டு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின. இதன்மூலம் 25,000 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்று கூறப்படுகிறது. மேலும், தைவான்நாட்டைச் சேர்ந்த 10 தொகுப்பு நிறுவனங்களுடன், ₹740 கோடி முதலீட்டில், 4,500 பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கும் வகையில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டன.

---

**3. கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூரில் இந்தியாவின் மிகப்பெரிய ஐபோன் தயாரிப்பு ஆலை**

இந்தியாவில் பாக்ஸ்கான், பெகட்ரான், விஸ்ட்ரான் ஆகிய நிறுவனங்கள் புதிய ஐபோன்களை தயாரிக்கும் பணிகளில் ஈடுபட்டு வருகின்றன. தமிழ்நாட்டைப் பொறுத்தவரை பாக்ஸ்கான் தொழிற்சாலையில் ஐபோன் தயாரிப்பு பணிகள் ஏற்கனவே நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது. இந்நிலையில் இந்தியாவில் ஐபோன் தயாரிப்பை 2 ஆண்டுகளில் 4 மடங்காக அதிகரிக்க பாக்ஸ்கான் நிறுவனம் இலக்கு நிர்ணயித்துள்ளது. அதன்படி, நாட்டிலேயே மிகப்பெரிய ஐபோன் தயாரிப்பு தொழிற்சாலை ஓசூரில் தொடங்கப்படும் என்று அறிவிப்பு வெளியாகி இருக்கிறது. இதற்கான கட்டுமானப் பணிகளை டாடா குழுமம் மேற்கொள்ளவிருப்பது குறிப்பிடத்தக்கது.

---